முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: 6 | 2—10—59 வெள்ளி | ஓலை: 23



சண்டிகாரில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி 3-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான முதலீட்டை 10 ஆயிரம் கோடி என்று நிர்ணயித்தார்கள்!

நெறி தவறிய நீரோக்கள் ★

★ புது உண்மை காணட்டும்!

அரியணை ஏறியவர்களின் இதயம் எரிதணலில் சிக்கிக் கருகும், 'வடக்கு வாழ்கிறது; தெற்குத் தேய்கிறது'—என்ற ஒலி கிளப்பும்போது! அந்த உண்மையைக் கேட்டதால் உடம்பெரிச்சல் கொள்ளும் அவர்கள், உண்மையை எதிர்த்தாவது வாதம் செய்யத் துணிவதில்லை! வாய் நெளிந்தபடி பேச ஆரம்பித்துவிடுகிறார்கள்.

'பைத்தியக்காரர்; நாடகமாடுவோர்; பிச்சைக்காரர்கள்'—இப்படித்தான் அவர்கள்—மதிப்பிற்குரிய அமைச்சர்கள் — பதில் தருவார்கள்!

'வடக்கு வாழ்கிறது — தெற்கு தாழ்கிறது.' இப்படிச் செய்தி கேட்டால் போதும், ஐந்து தோட்டாக்கள் இதயத்தில் பாய்ந்து விட்டதைப்போல் குதிப்பார்கள்!

காரணம், வருகிற செய்திகள் வளருகின்ற இந்த உண்மைக்கு எரு ஆகின்றனவே தவிர, எதிரிகளாவதில்லை!

வடநாட்டையும், தென்னாட்டையும் பார்த்தோர் கூறுகின்ற கூற்றுகள் இந்த உண்மைக்குக் கூடுதல் பலத்தைத் தருகிறதே தவிர, குலைத்துவிடுவதில்லை.

இதைக் கண்ட அமைச்சர்களின் இதயத்திலே நமைச்சலெடுத்தது. 'ஏதேது இந்த உண்மை உரம் பெற்றால், பாரதம் பிளவுபடும். ஊராளும் நம் உத்தியோகம் பறிபோய்விடும்,"—என்றெண்ணி, இதை முளையிலேயே கிள்ளிவிடமுனைந்தனர்.

கூட்டத்திற்குக் கூட்டம் இதற்கு எதிர்ப்புப் பாட்டையே படித்தனர். கண்ட உதாரணங்களைத் தந்தார்கள். தலைகீழாகக் கூட மாற்றிப்பார்த்தார்கள், அந்த உண்மையை!

தேசியப் பத்திரிகைகளுக்கு 'சாவி' தந்தார்கள். அவைகளும் உரத்த குரலில் பேசின! 'வடக்கு வாழ்கிறது—தெற்குத் தேய்கிறது—என்பதெல்லாம் பிரிவினை வாதம்; வேண்டாத பிடிவாதம்!'—என்றெல்லாம் எழுதின!

'வளரும் தெற்கு' — என்று ஏட்டிக்குப் போட்டியாக 'உண்மைச் செய்தி'களைத் தர ஆரம்பித்தது, 'ஆனந்த விகடன்' பத்திரிகை! 'வளரும் தெற்'கில் அணைகள் அடுக்கடுக்காக வரும். மின்சார நிலையங்களின் பட்டியல் வரும். சுரங்கங்களின் எண்ணிக்கை வரும்—என்றெல்லாம் மக்கள் எதிர்பார்த்தார்கள். பாவம், ஓரிரு இதழுக்கு மேல் 'வளரும் தெற்'கில் பெரிய திட்டங்கள் இல்லை. எனவே கிடைத்ததைக் கொண்டு இடத்தை அடைக்க ஆரம்பித்தார்கள்.

தஞ்சாவூர் பொம்மை!

தனிப்பட்டவர் தோட்டத்துத் தேங்காய், மாங்காய்!

—இவற்றையெல்லாம் படம் போட்டு 'வளரும் தெற்கு'—என்பதை நகைச்சுவைக்குரியதாக மாற்றிவிட்டார், அந்தப் பத்திரிகை ஆசிரியர்!

அமைச்சர்களோ வெந்து புழுங்கினார்கள், வேக நடைபோடும் 'வடக்கு வாழ்கிறது!' — எனும் அந்தக் கருத்தைக் கண்டு! பிதற்றினார்கள், போகிற பக்கமெல்லாம்! பித்துக்குளியைப் போல பேசினார்கள்! பணத்திற்கும் பட்டாடைக்கும் பேச்சாளர் ஆகியிருப்போரை விட்டு அந்த உண்மையைத் தூற்றச் சொன்னார்கள்!

என்றாலும் அது வளர்ந்தது! 'வடக்கு வாழ, தெற்குத் தேய்கிறது' எனும் உண்மையை எந்தக் கெட்டிக்காரனின் புளுகும் மறைக்க முடியவில்லை!

காரணம், 'வடக்கு உள்ளபடியே வளர்கிறது! வானத்தைக் கறுப்பாக்கப் புகைவிடும் ஆலைகள், வையகத்து மடியைத் துளாவிடும் பல்வேறு வகையான சுரங்கங்கள், வரண்ட நிலங்களை வாளைமீன் விளையாடும் வயல்களாக்கிடும் அணைகள், தேவைப் பொருள் — போகப் பொருள் தரும் தொழிற்சாலைகள் — இன்னும் பலப்பல முன்னேற்றத் தொழில்களும் அங்கே கோபுரம் போல வளர்கின்றன.

தெற்கே தேய்வு தெரிகிறது. கஞ்சன் வளர்க்கும் கறுநாய் போல மெலிவு தெரிகிறது. கண் துடைப்புக்கு ஓரிரண்டு அணைகள்; பேசுவோர் வாயடைக்க ஒரு சில பஞ்சாலைகள், தொடர்ந்து பஞ்சம் ஏற்படாமலிருக்க சில தொழிற்சாலைகள் அமைக்க வடவர்கள் அனுமதித்துள்ளனர்!

இருக்கும் இந்த நிலையை மறைக்க எந்த இரும்புத் திரையாலும் முடியாது. வஞ்சக வடக்கின் போக்கை உணர்த்தும் செய்திகள், பகலவனைக் காணப் புள்ளினம் புறப்படுவதுபோல் புறப்படுகின்றன!

அமைச்சர்கள் பார்க்கிறார்கள்; அச்சத்தின் சாயல் அவர்களின் கண்களில் நிழலாடுகிறது—என்றாலும் குதர்க்கம் பேசியாவது தப்பித்துக் கொள்ள முயல்கிறார்கள்.

'வடக்கு வளம் பெறுகிறதென்றால், அந்த நாடு வளமுள்ள நாடய்யா! கங்கை நதிபாயும் பிரதேசமல்லவா? அணைகள் கட்ட முடிகிறது! அங்கு கட்டுகிறார்கள்! அங்கு ஜீவ நதிகள் அதிகம்; ஆகவே அதிகமான அணைக்கட்டுகள்! அங்கு அணைக்கட்டுகள் அதிகம், ஆகவே மின்சார நிலையங்கள் அதிகம்! அதேபோல் பூமிக்கடியில் நல்ல விலைப்பொருட்கள் அங்கு இருக்கின்றன. எனவே சுரங்கங்கள் அதிகம். அங்கு பருத்தி கிடைக்கிறது, ஆகவே பஞ்சாலைகள் அதிகம்! தொழிலுக்குத் தேவையானது அங்கே அதிகம். ஆகவே தொழிற்சாலைகள் அதிகம்.

'இங்கே என்ன இருக்கிறது? மண்ணா இருக்கிறது? மண்கூட நல்ல மண் இல்லையே. 'அணை கட்டு' என்றால் எங்கே கட்டுவது அணை? மணல் ஓடும் பாலாற்றிலா அணை கட்டுவது? அணைக் கட்டிலில்லாமல் மின்சாரம் எங்கிருந்து வரும்? நம் பூமிக்குள் என்ன இருக்கிறது, இங்கே சுரங்கம் தோண்ட! தொழிற்சாலை வைக்க என்ன இருக்கிறது?'

—யாரோ பேசிய பேச்சு என எண்ணிட வேண்டாம். அமைச்சர்கள் நாள்தோறும் பேசும் பேச்சுகளின் தொகுப்புத்தான் இது!

அமைச்சர் இப்படிப் பேசுவதைக் கேட்டதுமே சிலருக்கு தலை சுற்ற ஆரம்பிக்கும்!

'வடக்கு வளம் பெறுகிறதென்றால்' என்று அமைச்சர் ஆரம்பித்தாரே, அப்போது வடக்கு வளம் பெறுகிறது — என்ற உண்மையை ஒத்துக் கொள்பவர் ஆகிவிட்டாரே?

அடுத்து, வடக்கு வளமுள்ள நாடு என்கிறாரே, ஏகபாரதத்தில் இந்த வளமுள்ளதும் வளமில்லாத நாடும் இருப்பது நியாயமா? அப்படி இருந்தாலும் வளமில்லாத நாட்டிற்குத்தானே சலுகை தந்து முன்னேற்ற வேண்டும் காந்தியவாதிகள்?

கங்கையில் அணைகள் கட்ட முடிகிறது என்கிறாரே! கங்கையில் அணைகள் கட்டிய செய்தி இதுவரை வரவில்லையே!

ஜீவநதிகள் அதிகமாம்; ஆகவே அணைக்கட்டு அதிகம் என்கிறாரே, இங்குள்ள ஜீவநதிகளை மறந்ததோடு, அந்த நாட்டு ஜீவநதிகளின் உபநதிகளில்தான் அதிகமான அணை கட்டுவதை அவர் மறந்தது ஏனோ?

பூமிக்கடியில் இங்கே என்ன இருக்கிறது—என்று இவர் கேட்கிறார்! தென்னகத்துப் பூமியில் பொன்னும் பிற விலைப்பொருளும் இருப்பதை பூமிநூல் நிபுணர்கள் கூறுகிறார்கள்.

பருத்தி கிடைக்கிறதாம் அங்கே; ஆகவே பஞ்சாலைகளும் அங்கே—என்று பேசுவோரே! தென்னகம்தான் பருத்தி விளைவதற்கேற்ற கரிசல் மண்பூமி—என்று பூமி நூல் பேசிக் கேட்டதில்லையா?

தொழிலுக்குத் தேவையானது இல்லை என்போரே! என்ன வேண்டும் அதற்கு? கடும் உழைப்பாளிகளா, பெருமுதலாளிகளா யார் வேண்டும்?

அமைச்சர்களே! இங்கு எல்லாம் இருக்கின்றன. இருந்தும் வளம் இல்லை—என்கிறீர்கள்! ஆனால் நாங்கள் சொல்லுவோம், தேயும் தெற்கை நிமிர்த்தும் மனவளம்தான் உங்களிடம் இல்லை! வடவனே முன்னேறும்படி அமைக்கப்பட்ட அரசியல் அமைப்பைத் தூள்தூளாக்கும் துணிவில்லை! துணிந்து நின்று வாழும் வகை கேட்க வக்கில்லை — உங்களுக்கு! இப்படி உண்மையை எடுத்தோதும் நம்குரலுக்கு வலிவு சேர்க்கும் செய்தி தருகிறார், ஒருவர்!

"தென்னாட்டில் வளம்பல உண்டு.
தொழில்கள் பெருக இடம் உண்டு. அதற்கான மூலப் பொருட்கள் உண்டு."

—அமைச்சரின் குதர்க்க வாதத்தை ஒரே நிமிடத்தில் வேட்டுவைத்துத் தகர்த்துத் தூள்தூளாக்கிக் காட்டும் இந்த உண்மையை மதுரை மாநகரில் கூறியவர் திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர் அல்ல!

வடநாட்டுத் தொழிலதிபர் எஸ். என். பிர்லா!

ஆம்; பிர்லாதான்!

வீம்பு பேசி உண்மையை மறைக்க முயலும் அமைச்சர்களே! உம் வாயெங்கே? அதிலே சுழல்கின்ற நரம்பில்லா நாக்கெங்கே?

பதினாறு இலட்சங்களும், பதிலுக்கு ஒரு இலட்சமும்!

★

"ஓரிரண்டு லட்சம் அங்கத்தினர்கள்தாம். பதினைந்து சட்டமன்ற உறுப்பினர்கள்தான். இரண்டே பாராளுமன்ற உறுப்பினர்கள்—தலைவர்கள் தங்களைச் சாமான்யர்கள் என்றுதான் கூறிக்கொள்கிறார்கள்—என்றாலும் 20 ஆயிரம், 22 ஆயிரம்—என்று மீதி காட்டுகிறார்களே மாவட்ட மாநாடுகளிலே, தி. மு. கவினர்?"—என்று பொதுமக்கள் ஆச்சரியப்படுகின்றனர்.

ஆனால் இந்திய தேசியக் காங்கிரசோ பல லட்சக் கணக்கான உறுப்பினர்கள்! மாநில அரசாங்கங்கள் அவர்கள் கையிலே! மத்திய அரசாங்கமும் அவர்கள் கையிலே! சாமான்ய மனிதர்கள் அல்ல அவர்கள்! மகாத்மாக்கள், பாபுக்கள், பாபாக்கள், பண்டிட்டுகள், ஆச்சாரியார்கள்! இவர்களின் அகில இந்தி நாகபுரி மாநாட்டையும் பொதுமக்கள் பார்க்கிறார்கள்!

மாநாட்டு அமைப்பிற்கு	—	5·00 லட்சம்.
சாப்பாடு	—	2·00 லட்சம்.
....		....
ஆக மொத்தச் செலவு		16·00 லட்சம்!

16 லட்சம் செலவழித்துக் கூட்டிய அந்த மகா நாட்டில் டிக்கெட் விற்பனை எவ்வளவு தெரியுமா?

1 லட்சம்!—ஆம் ஒரு லட்சம் மட்டுந்தானும்!

வெள்ளி 2—10—59 சென்னை

தடுக்காதீர் !

முற்போக்கு எண்ணங்களின் முன்னோடி என்று சொல்லிக் கொண்டு அரியணை ஏறியிருக்கும் சிங்கையின் புதிய அரசாங்கம் நல்லறிவாளர்கள் ஒப்புக்கொள்ளாத—கேட்கும் நேரத்தில் திகைக்கத் தக்க செய்தி ஒன்றை உலகிலே தவழவிட்டுக் கொண்டிருக்கிறது. பொருள் காணமுடியாத அதன் புதிரான நடவடிக்கை கண்டு இங்கும் அங்கும் வாழுகின்ற தமிழினத்தவர் திடுக்கிடத்தான் செய்திருக்கின்றனர்.

சொல்லின் செல்வர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள் சிங்கையிலும், மலேயாவிலும் வாழுகின்ற தமிழன்பர்களின் நீண்டகால வேண்டுகோளுக்கிணங்க நல்லெண்ணப் பயணம் ஒன்றை மேற்கொள்ள இருந்தார். நம்மவர்களின் வெளிநாட்டுப் பயணத்தையெல்லாம் குறுகிய மனக்கண்ணோடு துருவித்துருவி ஆராய்ந்து—தானே விபரீத முடிவெடுக்கும் வந்து—'போகாதே வெளியே' என்று தடுத்துப் பழக்கப்பட்ட இந்த நாட்டு சர்க்காரும் சம்பத்தைத் தடுக்கவில்லை; வெளிநாடு செல்வதற்கான அனுமதியை அளித்துவிட்டது. ஆனால் சிங்கை அரசாங்கமும், அதைத் தொடர்ந்து மலேயா சர்க்காரும் அவரைத் தத்தமது நாடுகளில் நுழைவதற்கான அனுமதியை நிராகரித்து விட்டன; புதிர் வினாக்குறிகளை அரசியல் வானிலே எழுப்பி விட்டிருக்கின்றன.

சம்பத் அவர்கள் தன்னோடு போர்ப்படை எதையும் திரட்டிக் கொண்டு, அங்கிருக்கும் அரசுகளை வேரோடு வீழ்த்திவிடப் புறப்படவில்லை!

தென்னகத்திலே சீரும் சிறப்பும் பெற்று வருகின்ற இயக்கம் ஒன்றின் செயல் வீரர் சம்பத்; சிந்தை மகிழ்விக்க செந்தமிழில் சொற்பெருக்காற்றும் பேராற்றல் பெற்றவர்; பாராளுமன்றத்திலே இடம் பெற்று பயனுள்ள செயல்கள் பலவற்றைத் தொடர்ந்து செய்து வருபவர்; அத்தகைய வித்தகரை நேற்றுவரை எழுத்தாலும், மற்றவர் பேச்சாலுமே சந்தித்து வந்தனர் அங்கு வாழுகின்ற தமிழ் மக்கள்! அந்தச் சொல்லின் செல்வரை—தாயகத்தில் பிறந்து, தரணி எங்கும் புகழ் பரப்பிய சொல்லேருழவரை — தங்களின் உடன்பிறந்த உத்தமச் சகோதரரை—சந்திக்க வேண்டும் என்று அங்குள்ளோர் விரும்பியதில் தவறென்ன? அவரது அழகுதமிழும் சொல்லமுதைப் பருக வேண்டும் என்று காத்துக் கிடந்ததில் குறையென்ன? அத்தகைய அரியதான நேரமொன்று ஆண்டுகள் பலவற்றுக்குப்பின் கிடைக்க, அதைத் தடுத்திடத்தான் வேண்டும் என்ற நிலையெழக் காரணம் என்ன ?

இத்தனைக்கும் சம்பத் வெளிநாடு சென்றறியாதவர் அல்ல. சென்ற ஆண்டு பொதுவுடைமைப் பூங்காவாம் சோவியத் நாட்டிற்குச் சென்று பாராட்டும் வரவேற்பும் பெற்றுத் திரும்பியவர். திரும்பிய பின்னரும் தான் சென்ற நாட்டில் 'இன்னின்ன கொடுமைகளைக் கண்டேன்; மடமைகளைக்கண்டு மனம் வெதும்பினேன்' என்று பறைசாற்றிக் கொண்டிருக்கவில்லை. அந்த நாட்டின் அரிய பெரிய சாதனைகளைத்தான் அன்று முதல் இன்றுவரை சொல்லி வருகிறார். அப்படியிருக்கையில், தன் நிறைவு பெற்ற நாடுகளாகிய சிங்கைக்கும் மலேயாவுக்கும் சென்று திரும்பி அவைகளைத் தூற்றிப் பேசுவார் என்று கருதினார்களா? மற்றவர்கள் வந்து போய் தங்கள் நாட்டைப் பாராட்ட வேண்டும் என்று அந்த அரசுகள் கருதாதது வியப்பிலும் வியப்பாகத்தான் தோன்றுகிறது.

மேலும், சிங்கை நாட்டில் இப்போதுதான் இயக்கத்தவர் முதன் முதலாக நுழைய விரும்புகிறார்கள் என்றும் சொல்ல முடியாதே!

திராவிடத்தின் தந்தை பெரியார் அவர்கள் இரண்டாண்டுகளுக்கு முன்பு சிங்கையிலே சுற்றுப்பயணம் நடத்தியிருக்கிறார்; அங்கு வாழுகின்ற தமிழினத்தோடு அளவளாவி இருக்கிறார்!

இயக்கத்தின் முதுபெரும் தலைவர்களில் ஒருவரான அ. பொன்னம்பலனார் அவர்கள் சென்ற ஆண்டு சிங்கை சென்றிருக்கிறார்; தென்னகத்தின் அரசியல் நிலைமைகளை—செந்தமிழின் மங்காப் புகழைப் பறைசாற்றித் திரும்பியிருக்கிறார்.

கலையுலகக் காவலர்களில் ஒருவராம் — நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி தம் குழுவினருடன் அங்கே சென்றிருக்கிறார்; அறிஞர் அண்ணாவின் நற்றமிழ் நாடகங்களை, எடுத்தெழுத முடியாப் பாராட்டோடும் பெருமகிழ்ச்சிக்கு இடையிலேயும் நடித்துக் காட்டித் திரும்பியிருக்கிறார்!

அங்கு வாழ் மக்கள் மட்டுமல்ல; மாண்புமிக்க அரசுகளுங்கூட அவர்களை எல்லாம் வரவேற்று உபசரித்திருக்கின்றபோது சம்பத் அவர்களை மட்டும் தடுக்கவேண்டிய அவசியமென்ன?

ஆனால், இந்தத் திடீர் உத்தரவுக்கு வியக்கத்தக்க விளக்கம் ஒன்றைத் தந்திருக்கிறார் சிங்கை கலாச்சார அமைச்சர் ராசரத்தினம் என்பார்.

"இந்தியப் பேரரசிற்கும், சிங்கை அரசுக்கும் இடையே இருந்துவரும் நல்லுறவை சம்பத் அவர்களின் சுற்றுப்பயணம் குலைத்துவிடக் கூடும். அவர், இந்தியாவில் தமிழர்களுக்கென்று ஒரு சுதந்திரக் கூட்டாட்சி அமைக்கவேண்டும் என்பதற்காக இங்கு ஆதரவு திரட்ட வருகிறார்; இதை நாங்கள் 'அனுமதிக்க முடியாது!'

அமைச்சருடைய இந்த விளக்கம் அடியற்ற மரம்போல்தான் தோன்றுகிறது. இந்திய நல்லுறவைக் குலைத்துவிடும் நோக்கத்தோடு சம்பத் புறப்படுகிறார் என்று அவர் குற்றம் சாட்டுகிறார். இதிலே எந்த அளவுக்கு நீதி புதைந்து கிடக்கிறது என்பது தெள்ளத்தெளிய விளங்குகிறது!

அப்படித் தன் நாட்டின் இழிவை எடுத்துச்சொல்ல—பலவீனத்தைப் பறைசாற்ற அவர் செல்கிறார் என்பது உண்மையானால், இந்திய சர்க்காரே முதலில் அவருக்குத் தடை விதித்திருக்குமே! தங்களுக்கு எதிராக வெளிநாடு சென்று செல்வாக்குத் தேடுவதையோ — படை திரட்டுவதையோ—ஒரு சர்க்கார் விரும்புமா? அத்தகைய ஒருவருக்கு அனுமதிதான் அளித்திருக்குமா? இதை உணர்ந்து பார்க்கிற நேரத்திலேயே சிங்கை அரசு தருகின்ற காரணம் நேர்மைக்குப் புறம்பானது என்று நன்கு புலப்படுகிறது!

கட்சி வேறுபாடு மறந்து—உள் நோக்கம் எதுமின்றி — 'நல்லெண்ணம்' ஒன்றையே மனதில் கொண்டு ஒரு நாட்டினர் பக்கத்து நாடு சென்று வருவதை உலகம் விரும்பி அனுமதிக்கிற காலம் இது! 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்கிற தமிழ் முதுரையின் நற்பொருளை மன மலர்ச்சியோடு ஏற்றுக்கொள்ளும் நேரம்! முதலாளித்துவ நாடுகளின் எதிரியாகக் கருதப்பட்ட குருஷேவ் இன்று அமெரிக்காவில் சுற்றுப்பயணம் செய்ததை ஐசனோவர் தடுக்கவில்லை; கம்யூனிசத்தைப் பரப்பத்தான் வருகிறார் என்றும் தடைவிதிக்கவில்லை; 'எம் நாடு வருக' என்று குருஷேவ் அழைத்ததையும் வெறுத்தொதுக்கவில்லை; இத்தகைய உறவைத்தான் காலமெல்லாம் யுத்த பீதி கொண்டு அஞ்சி வருகின்ற இந்த அகிலம் வரவேற்கிறது!

இந்த நேரத்தில் சிங்கை அரசு செய்த முடிவு வருந்தத்தக்கது. இந்த நடவடிக்கை மூலம் அந்த அரசு பெற்றுவிட்ட தமிழினத்தின் வெறுப்பை விரைவில் களைந்தெறிய வேண்டும் என்பது நல்ல நெஞ்சு படைத்தோரின் பேரவா! ஃ



பேனா ஓவியம் [பக்கம்-5]

தி. மு. க: என்னப்பா காங்கிரஸ், எங்கிருந்து வருகிறாய்?

காங்கிரஸ்:... கூட்டத்திலிருந்து!

தி. மு. க: இன்றைக்கொன்றும் அரசியல் கூட்டமில்லையே; அதுவும் உங்கள் கட்சிக் கூட்டம் ஒன்றுகூட இல்லையே?

காங்: அரசியல் கூட்டத்திலிருந்து அல்ல! அஞ்ஞானத்தை விரட்டியடித்த கூட்டத்திற்குப் போயிருந்தேன் — அதாவது

காங்: அதாவது உலகம் கடவுளால் படைக்கப்படவில்லை. அப்படிப் படைக்கப்பட்டதாகக் கூறப்படுவதெல்லாம் பொய்! பக்குவமில்லாத மக்களுக்குக் கூறப்படும் கற்பனைச் சரக்கு! எப்படி இவருடைய கருத்து?

தி. மு. க: சொந்தமான கருத்தா?

காங்: 'கௌதபாத உபநிஷத்தை' வைத்து இவர் கூறும் கருத்து.

ஆவடி சோஷலிசத்திலிருந்து சின்மயானந்தர் காலடிக்கு!

சென்னையில் காங்கிரசாரே அதிகம் குழுமியுள்ள சமயக் கூட்டத்திற்குப் போயிருந்தேன்.

தி. மு. க: ஏன் அரசியலில் வெறுப்பா...?

காங்: சேச்சே! அப்படி எல்லாம் ஒன்றுமில்லை. ஏதோ சமயம் கிடைத்தபோது பகவான் நாமத்தை ஜபித்து...

தி. மு. க: ஆமாம், சோஷலிசத்தைவிட சமயம் அவ்வளவு முக்கியமா உனக்கு?

காங்: என்ன இப்படிக் கேட்டு விட்டாய்? எந்தக் காங்கிரஸ் தலைவர் உங்களைப்போல் 'பகுத்தறிவு' அப்படி — இப்படி என்று பேசிக்கொண்டிருக்கிறார்கள்? ஏன்—பண்டிதரையே எடுத்துக்கொள். அவரைப் போன்ற சோஷலிசவாதி நம் நாட்டில் யார்? 'கடவுளுக்குப் பயப்படமாட்டேன்'— என்று கூறும் தைரியம் யாருக்கு வரும்? — இப்படி எல்லாம் அவர் வெளியில் பேசினாலும் உள்ளூர அவர் ஒரு பக்திமான் — ஒரு நல்ல வைதீகர். பாபு ராஜேந்திரப் பிரசாத்துதான் என்ன, சமயச் சடங்குகளை ஒன்று விடாமல் செய்யக்கூடிய உத்தமர். நம் காமராசர்கூட 'திருச்செந்தூர் கோயிலுக்கு வரமாட்டேன்'—என்று வெளியே கூறினாலும் உள்ளூர பக்தி உண்டு!

தி. மு. க: அப்படியா? அடடே... இதுவரை தெரியாமற் போயிற்றே? ஆமா. நீ போய் வந்த கூட்டத்தில் யார் பேசியது?

காங்: உத்தரகாசிவாசி சின்மயானந்த சுவாமி.

தி. மு. க: உத்திரகாசிவாசி என்றால் வடக்கத்தி ஆளா?

காங்: இல்லை. நம் கேரளத்துக்காரர்தான்! பெயர்தான் அப்படி!

தி. மு க: பெயரே அப்படியோ?....ஆமா என்ன பேசுகிறார்?

காங்: ஆங்கிலம் பேசுகிறார். அடடா! என்ன அழகு ஆங்கிலம்? ஆங்கில மொழியெனும் கடலுக்கு மடையிருந்து அதை உடைத்து விட்டால் எப்படி வெள்ளம் பாயுமோ, அப்படி 'மள மள'வென வருகிறது ஆங்கிலம். அவருடைய அந்த மொழித் திறமையை ரசிப்பதற்கு மட்டுமே பெரும்பாலோர் வருகிறார்கள். 'எளிய நடைதான் இனிய நடை' — எனும் ஆங்கிலப் பொன்மொழிக்கேற்ப என்னமாதிரி ஆங்கிலத்தைப் போட்டு உருட்டுகிறார் தெரியுமா?

தி. மு. க: அவர் உருட்டுவது இருக்கட்டும் நண்பா! அவர் கூறும் உருப்படியான கருத்து என்ன?

காங்: சில விஷயங்களெல்லாம் உன் மாதிரியே பேசுகிறார். கோயில், குளம் இவற்றிலெல்லாம் ஆண்டவன் இல்லை; உன் மனதே ஆண்டவன்! — என்கிறார். அதோடு ஒரு புதுக் கருத்தையும் சொல்கிறார்.

தி. மு. க: என்ன அது?

காங்: உலகத்தைக் கடவுள் படைக்கவில்லை; அப்படிப் படைக்கப்பட்டது என்று கூறுவதெல்லாம் பொய்!—என்று கூறுகிறார். மேலும்........

தி. மு. க: இரு. இரு. கொஞ்சம் தெளிவுபடுத்திக் கொள்கிறேன். யார் பேசியது?

காங்: சுவாமி சின்மயானந்தா!

தி. மு. க: சரி, ஒரு சிறு சந்தேகம். அவர் விஞ்ஞானத்தையும் கேலி செய்கிறாரா?

காங்: ஆ...பிரமாதமாகக் கேலி செய்கிறார்.

தி. மு. க: நினைத்தேன். ஏன் அவ்விதம் செய்கிறார்?

காங்: பின் என்ன; வைதீகத்தைக் கேலி செய்யும் விஞ்ஞானப் பிரியர்களை சும்மா விட்டு விடுவாரா? நாலே நாலு கேள்விகள். விஞ்ஞானப் பிரியரைக் கேட்டால் போதும். திணறிவிடுவார். 'நாம் எங்கிருந்து உற்பத்தியானோம்?' — என்ற கேள்விக்கு விஞ்ஞானி என்ன சொல்வான்? 'பூமியில் பரிணாமம் அடைந்தோம்'—என்பான். சரி.......'பூமி எங்கு உற்பத்தியாயிற்று?'—என்ற கேள்விக்கு 'சூரியனிலிருந்து!' — என்ற பதில் தருவான். ....'சூரியன் எங்கிருந்து உற்பத்தியானான்'? என்ற கேள்விக்குப் பதில் வருமா? வராது! திணறுவான்! குழப்புவான்! வைதீகக் கருத்தை மறுக்கும் வீரனே! இதற்குப் பதில் சொல்!....

தி. மு. க: பதில் தருவது இருக்கட்டும். விஞ்ஞானியைப் பார்த்து நீ சொல்வதுபோல் அடுக்கடுக்காக இப்படிக் கேள்வி கேட்டால் உன்னை என்ன என்பான்!

காங்: ஒன்றும் மோசமாக சொல்லமாட்டான்!

தி. மு. க: அதோடு மட்டுமல்ல; இப்படிப்பட்ட கேள்விகள் வளரவேண்டும் — விஞ்ஞான அறிவு அப்போதுதான் வளரும் என்று கூறுவான். ஆனால் உங்கள் வைதீகரை—புராணீகரைப் பார்த்து 'கடவுளை யார் படைத்தார்?' — என்று கேட்டால் என்ன கூறுவான்?

காங்: ....

தி. மு. க: நான் சொல்லுகிறேன். குதர்க்கவாதி என்பான்; நாத்தீகன் என்பான்; நரகம்தான் உனக்குக் கிட்டும் --என்று சபிப்பான்! இதிலிருந்து தெரிந்துகொள். நண்பனே! வைதீகனுக்கும் விஞ்ஞானிக்குமுள்ள வேற்றுமையை!

காங்: வேற்றுமை இருக்கட்டுமப்பா! அவருடைய 'உலகம் படைக்கப்படவில்லை' என்ற கருத்தைப்பற்றி நீ என்ன சொல்லுகிறாய்?

தி. மு. க: கருத்தைப் பற்றிச் சொன்னால்தானே என் எண்ணத்தைக் கூறமுடியும்?

வெளிவந்துவிட்டது!

கலைஞர் கருணாநிதியின்

சிறுகதைகள்

எழில் நிறைந்தது; ஏற்றங் கொண்டது

விலை ரூ. 1—50.

முத்துவேல் பதிப்பகம்,

77, மதுரை சாலை, — திருச்சி—8

[தனிப் புத்தகம் வேண்டுவோர் புத்தக விலையுடன் 25 புதிய காசுகள் அதிகமாகச் சேர்த்து மணியார்டர் அனுப்பவும்.]

தி. மு. க: உபநிஷத், கீதை, வேதம் — இவற்றிலிருந்தெல்லாம் நல்ல நல்ல உவமை தருவார்—என்று கூறு.

காங்: ஆமாம்! ஆமாம்!!

தி. மு. க: அந்த வேத புத்தகங்களின் கருத்துக்களையே மறுத்தும் கூறுவார்—இல்லையா?

காங்: சே! அந்த மாதிரி கேவல புத்தி அவருக்குக் கிடையாது. ஆனால் அவர் கொள்கைக்கு மாறான கருத்துக்களைச் சாடுவார்.

தி. மு. க; கடவுளால் உலகம் படைக்கப்படவில்லை — என்று கூறும், இவர், 'நானே உலகங்களைப் படைத்தேன், இன்பத்தைப் படைத்தேன், துன்பத்தைப் படைத்தேன்' — என்று முழுமுதற் கடவுளான திருமாலின் வாய்ச் சொல்லான கீதையின் வாச்கத்தை சாடுவாரா? கீதை ஒரு பொய் மூட்டை என்று கூறுவாரா?

காங்: ....

தி. மு. க: — ஏன் மௌனம் நண்பா! 'எத்தனை கோடி இன்பங்கள் படைத்தாய் இறைவா!' — என்று பாடிய தெய்வமாக் கவிகளை, கடவுள் உலகைப் படைக்கவில்லை என்று கூறும் உங்கள் சாமியார் கண்டிப்பாரா? அது சரி. சின்மயானந்தர் பேச்சைக் கேட்கும் நீங்கள் எல்லோரும்–கதர் சட்டை அணிந்தவர் எல்லோரும், உபநிஷத்தை — அவர் கூறும் வேத ஒலியை—'ஓம்'— எனும் ஓங்கார ஒலியைப் பின்னணியில் கூறுவதுண்டா?

காங்; ....ஆம்!

தி. மு. க: ஏன் அவைகளைக் கூறுகிறீர்கள்? வேதக் கருத்துகளைத்தான் நீங்கள் உணர்ந்து கொண்டு விட்டீர்களே! ஏன் புராணத்து உதாரணங்களைக் கூறுகிறீர்கள்? அதுதான் பக்குவமில்லாதவர்களுக்குரியதாயிற்றே! அரசியலில் செய்த குழப்பங்கள் போதாதென்று மதத் துறையிலும் போய் ஏன் குட்டையைக்குழப்புகிறீர்கள்? ஏன் நண்பா திரும்புகிறாய். எனக்குத் தெளிவாகச் சொல்! பகுத்தறிவுவாதிகளின் பிரச்சாரத்தை இதன் மூலமாவது மங்கச் செய்ய வேண்டும்—என எழுந்த 'உலகம் படைக்கப்படவில்லை' என்ற குழப்ப வாதத்தை ஆதரிக்கிறாயா? இல்லையா? சொல் — ஏன் நண்பா, வேகமாக நடக்கிறாய்? நில், நண்பா, எங்கே ஓடுகிறாய்?

ஈழத்தீவிலே ஒரு இடி விழுந்த கோயில்!

ஏதையும் தாங்கும் இதயம் படைத்தவர்கள்தான் பொது நலப் பூங்காவிலே அடிவைத்து நடைபோட முடியும் — அரசியல் உலகம் ஆண்டாண்டு காலமாக எடுத்துச் சொல்லிவருகின்ற சித்தாந்தம் இதுவாகும்.

அந்தப் பூங்காவிலே தவழ்ந்து வரும் தென்றல் மட்டுமல்ல; தடுக்கி விழுகின்ற இடமெல்லாம் வாழ்வு முடிக்கும் விஷகுழிகள் ஏராளம் உண்டு.

'நாம் பெற்ற பேறு நீ பிறந்த வேளை' என்று பாராட்டுரை வழங்கி — 'வருக; வருக' என்று வரவேற்கும் தூய நல் நெஞ்சத்தவர் மட்டுமல்ல; புதருக்கடியிலே பதுங்கி நின்று, புகழுக்கிடையிலே உயிர் பறிக்கும் நச்சு நாகங்களும் அங்கே உண்டு!

மலர் மாலைக்கு நீட்டுகின்ற கழுத்தை, வெட்டரிவாளுக்கும் காட்டத்தான் வேண்டியிருக்கிறது; மக்களின் வாழ்வுக்கு ஒதுக்கப்பட்ட இதயத்தில் துப்பாக்கிக் குண்டுகளுக்கும் இடம் தரத்தான் நேரிடுகிறது!

அத்தகைய துரோகத்திற்குப் பலியாகி 'மக்களின் தலைவன்' என்ற தனது தகுதியை நிரப்பிக் கொண்டவர்கள் அநேகர்!

அப்படிச் சாவையும் வாழ்வையும் ஒன்ருகக் கருதி, அரசியல் உலகத்தில் நன்ருக வளர்ந்து, இறுதியில் துரோகத்திற்குப் பலியானவர்களின் பட்டியலில் இப்போது இடம் பெற்றுவிட்டார், பக்கத்து நாடாம் இலங்கையின் பிரதமர் பண்டார நாயகர்!

அவர் கொல்லப்பட்டார்; அவருடைய சரித்திரம் முடிந்துவிட்டது; இல்லை—முடிக்கப்பட்டுவிட்டது!

இலங்கைத் தீவுமட்டுமல்ல; இதயம் படைத்த நல்லறிவாளர்கள் எங்கெங்கு இருக்கிருர்களோ; அங்கெல்லாம் இந்தச் செய்தி துக்கத்தைச் சுமந்து சென்றிருக்கிறது; திகிலோடு கலந்த திகைப்பையும் பரப்பிவிட்டிருக்கிறது!

காரணம்....அவர் சாகவில்லை; கொல்லப்பட்டிருக்கிருர்!

என்றும்போல் அன்றும் காலைக் கடன்களை முடித்து, காத்திருக்கும் தோழர்களைக் காண வந்தார். பொதுப் பணியில் ஈடுபட்டோன் — பொறுப்பான பதவியில் அமர்ந்திருப்போன்-செய்து தீர வேண்டிய கடமைகளில் ஒன்றுதான் அது. குறை என்ன என்று கேட்டறியவும், குமுறுகின்ற உள்ளத்தவர் சூழ்ந்திருந்தால் உற்றது செய்யவுமே அவர் தேடி வந்தார், தன் மாளிகையின் ஒரு பகுதிக்கு!

இதில் குறையென்ன கண்டாரோ தெரியவில்லை; குள்ளமதி படைத்தவன் ஒருவன் குண்டு மழை பொழிந்துவிட்டான்!

இத்தனைக்கும் அவர் கும்பிட்டாராம் அவனை நோக்கி! கையிலே மறைத்திருக்கும் சுழல் துப்பாக்கியோ, இதயத்திலே ஒளித்திருக்கும் சூதோ; சூழ்ச்சியோ— அவருக்குத் தெரியவில்லை; அவன் உடுத்தியிருந்த உடை 'அவன் யார்' என்பதை—அந்த துரோகத்தின் மொத்த உருவை—மறைத்துவிட்டது!

அகிலத்துக் கெல்லாம் அறிவொளி வழங்கிய பகுத்தறிவுச் சுடராம் — சனதன தர்மத்தைப் பூக்காமல் காய்க்காமல் வேரோடு சாய்க்க வந்த வெற்றித் திருமகனும் போதிமரத்துப் புத்தனின் புகழ்பாடும் 'பிக்கு'வின் உடையிலே அந்தக் கயவன் — புனித உருவிலே உலவிய மிருகம் — மாநிலத்தோர் கேட்டறிந்தால் காறி உமிழத்தக்க மாபெரும் துரோகி — மறைந்திருந்தானும்!

நெருப்பிலே விழுந்த நாகத்தை வெளியிலே எடுத்து வாழ்வளித்தாலும், படமெடுத்து காத்தவனையே சாய்க்கும் என்பார்கள். அதைப்போலவே புத்தனின் கொள்கை பரவப் பாடுபட்டபண்டாரநாயகா 'புத்தபிக்கு' வேடமிட்டவனுக்குத் தலைகுனிந்தார்; குனிந்த தலையைக் கொய்துவிட்டான், அந்தக் கொடியவன்.

ஆனுலும், உலக வரலாற்றில் இது மிகமிகச் சாதாரணமான நிகழ்ச்சியாகிவிட்டது — என்று எண்ணுகிற நேரத்தில் நெஞ்சு வேதனையால் விம்மி எழத்தான் செய்கிறது. 'நாட்டுத் தலைவன்' என்ற பட்டம் பெற்றவர்கள் அநேகர் இத்தகைய நாசத்துக்குப் பலியான உண்மைகளைச் சரித்திரத்தின் இரத்தக் கறை படிந்த ஏடுகள் எடுத்துச் சொல்லிக்கொண்டுதான் வருகின்றன!

அடிமை விலங்கொடித்த ஆபிரகாம் லிங்கன் தன் மரணத்தை இயற்கையாக சந்திக்க முடியவில்லை!

விடுதலைக்குப் போராடி — துணைக் கண்ட மக்களின் விழி நீரைத் துடைத்திட்ட காந்தியாருக்குக் கிடைத்ததும் துப்பாக்கிக் குண்டுகள்தான்!

வெள்ளை ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுதலை பெற்று—விடுதலைச் சாசனத்தைத் தயாரிக்கும் பெரும் பணியிலே ஈடுபட்டுக் கொண்டிருந்த நேரத்தில், சுழல் துப்பாக்கி கொண்டு ஏழு அமைச்சர்களை ஒருசேரச் சுட்டு வீழ்த்தியவனையும் பர்மிய வரலாற்றிலே நாம் சந்திக்கிருேம்!

பாக்கிஸ்தானில் லியாகத் அலிகான்—இலங்கையிலே பண்டாரநாயகா—இப்படிக் கணக்கெடுக்கவும் வழியமைத்துக் கொடுத்துவிட்டது, தொடர்ந்து நடைபெறுகின்ற அரசியற் படுகொலைகள்!

பண்டாரநாயகா அறுபது வயது பூர்த்தியான அரசியல் தலைவர்! சிங்கள இனத்துக்காகவும், நாட்டுக்காகவும் பாடுபட்டுக் கொண்டிருந்தவர்!

இரண்டாண்டுகளுக்கு முன்பு இலங்கையின் அரியணையில் அவர் இடம் பெற்ற நேரத்தில் தமிழகம் அவரை வெகு உன்னிப்பாகக் கவனித்தது; அவரது செங்கோல், செந்நீரைச் சிந்துகின்ற சிங்களம் வாழ் தமிழினத்தின் வாழ்வை எப்படி நிமிர்த்தப் போகிறது என்ற ஏக்கப் பெருமூச்சு திக்கெட்டும் எழுந்தது!

நாடு எதிர்பார்த்தது, அவர் நலம் பல குவிக்காவிட்டாலும், அங்கு நிலவும் நலிவு துடைக்கப் போராடுவார் என்று!

காரணம், அவர் கொன்று குவித்து வெற்றி வாகை சூடிய கொத்தலாவாலை கட்சி, தமிழர்தம் இதயங்களைக் கொத்திக் கொத்தி ருசி பார்த்த கட்சியாகும். தமிழனென்று சொன்னுல், தலை வேறு; முண்டம் வேருகும் நிலைமையை சிங்களத்திலே உருவாக்கி வைத்திருந்தார், கொத்தலாவலை! "தமிழ் மொழியையும் ஆட்சி மொழியாக்க வேண்டும் என்ற ஆசையை எவனொருவன் மனதிலே கொண்டிருந்தாலும் அவனை என் இனத்திற்கே முதல் எதிரியாகக் கருதுவேன்; கருவறுப்பேன்"—என்று கர்ஜனை எழுப்பிய அவரைத் தேர்தலில் முறியடித்தவர் பண்டார நாயகா! அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் செல்லப்பிள்ளையை — ஐசனேவர் துரையின் தலையாட்டி பொம்மையை வீழ்த்திய மக்கள் ஐக்கிய முன்னணித்தலைவராம் பண்டார நாயகாவை நாம் வரவேற்ருேம், நம் இனத்தின் வளம் காணக் கூடும் என்று!

பதவி ஏற்ற நேரத்திலே நம் அகம் குளிரும் சேதி ஒன்றையும் அவர் வெளியிட்டார், அதிகாரப் பூர்வமாக "இலங்கையையும், இந்தியாவையும் பிளந்திருக்கும் 'தமிழர்கள் பிரச்சினை'க்கு நல்ல முடிவு காண்பேன்!" என்று.

கோபுரத்தின் உச்சியிலே நின்று கொக்கரித்த கொத்தலாவலை போன்றவர்களின் சுடு சொற்களைக் கேட்டுக் கேட்டுச் சலித்துப்போன தமிழினம், இந்த ஆறுதலான சொல் கேட்டு அன்று மகிழ்ந்தது!

ஆனுல் எதிர்பார்த்த நலன் எதுவும் அவர் செய்யவில்லை; கொடுத்த வாக்குறுதியைக் காக்கும் வலுவற்று விளங்கினுர் — என்பது உண்மைதான்; ஆனுல் மற்ற கொடியவர்களைப் போல், தன் கையினுலேயே தமிழினத்தை ஒழிக்க கொலைக் கருவிகளை எடுத்து நீட்டவில்லை என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்திலே பயின்றவர்—

மதத்தால் கிறித்துவர் என்ருலும், புத்தமதக் கொள்கைகளைப் பரப்புவதற்கு உழைத்தவர்—

புத்தமத நகரமான அனுராதபுரத்தைப் புதுப்பித்து தன் பெருந்தன்மையைப் பறைசாற்றியவர்—

இருபத்தேழு ஆண்டுகாலம் தொடர்ந்து மக்கள் அவையின் உறுப்பினராக உழைத்து வந்தவர்—

சோஷலிச மனேபாவத்துடன் பண முதலைகளின் கையில் சிக்கிக் கிடந்த துறைமுக, பஸ் போக்குவரத்தை தேசிய மயமாக்கினவர்—

பிரதமர் நேருவுடன் பலமுறை பேசி இந்திய—இலங்கை நட்புறவுக்காகப் பாடுபட்டவர்—

இறக்கும் தறுவாயில் தன்னைச் சுட்டவனை மன்னிக்க வேண்டியவர் — அறிவில்லாத்தனமாக அவன் செய்துவிட்ட செயலுக்கு வருந்திய பின்னரும் ஈரலில் புகுந்துவிட்ட குண்டுகளை எடுத்த பிறகு நாட்டுமக்கள் அமைதியைக் காக்கும்படியும், இந்தமாதிரி நேரங்களில் தைரியத்தைக் கடைபிடிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்ட தேசபக்தர் — மரணப் படுக்கையில் கூட தன்னைக் கொன்றவனின் நிலையைப்பற்றி விசாரித்தவர் —

இவ்வளவு புகழுக்கு அவர் உரியவர் என்ருலும், அவரால், சிங்களத்தைச் செழிக்கச் செய்த தமிழினம் — இரத்தத்தையும், வியர்வையையும் கலந்துகொட்டி இலங்கைத் தரணியைச் செல்வ பூமியாக மாற்றிய நம்மினம் — அமைதியுடன், ஆபத்தின் துணையின்றி வாழ வழி வகுக்க முடியவில்லை!

'எதிர்காலத்தில் அவர் அதைச் செய்திருக்க முடியும்' என்று எண்ணத்தக்க நிலையே ஏற்படாதவண்ணம் அவரைக் கொன்றுவிட்ட துரோகியை நாம் மன்னிக்க முடியாது!

வாழ்க மணமக்கள்!

"நம்நாடு" இதழில் துணையாசிரியராகப் பணியாற்றி வருகின்ற தோழர் மா. செங்குட்டுவன், சென்ற 31—8—59 அன்று திருவேதிகுடியில் தோழியர் அரவிந்தநாயகியைத் தன் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டார்.

19. சந்திப்புக்கு முன்!

புகார்த் தலைநகரத்துக்குப் பத்து கல் தொலைவிலுள்ள பெருவெளியொன்றில் பாண்டிய நாட்டுப் படைவீரர்கள் இறங்கி, தங்குவதற்கேற்ற கூடாரங்களை அமைக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தனர். தளபதி நெடுமாறன், தன் துணைத்தளபதியிடம் போர் முறைகள் எப்படியெப்படி இருக்கவேண்டும் என்பது பற்றி விவாதித்துக்கொண்டிருந்தான். அவன் தங்கியிருந்த முகப்பில் மீனக்கொடி கம்பீரமாகப் பறந்துகொண்டிருந்தது. கூடாரங் கட்டும் பணியில் ஈடுபட்டிருந்த வீரர்கள் போர்ப்பரணி பாடியவாறு ஆடி ஓடி மகிழ்ந்தனர். போர்ச்சேதி கேட்டதும் அவசர அவசரமாகப் போர்க்கருவிகளைத் தூக்கிக்கொண்டு ஓடிவந்தவர்கள், அந்தக் கருவிகளை மெருகேற்றிக் கூர்மையாக்கிக் கொண்டிருந்தார்கள். சமையற்கலையிலும் வல்லவராயிருந்த சில வீரர்கள் உணவு தயாரிக்கும் அலுவலில் மும்முரமாக ஈடுபாடு கொண்டிருந்தனர்.

முரசுபோல் காணப்படும் பாத்திரங்களில் ஊற்றிவைக்கப்பட்டிருந்த கள்ளை ஒரு வீரன் எல்லா வீரர்களுக்கும் அளவோடு வழங்கிக் கொண்டிருந்தான். அதை அருந்தியவர்கள் புது ஊக்கமும் — அருந்தாதவர் அருந்தப்போகிறோம் என்ற புது உற்சாகமும் பெற்றுக் காட்சி தந்தார்கள்.

போராசட்டக் களிப்பில் மூழ்கியிருந்த அவர்கள் எல்லோரும் திடுக்கிட்டுத் திரும்பும் அளவுக்கு குதிரையொன்றின் குளம்படி ஓசை பாசறையை நோக்கி வந்துகொண்டிருப்பதை உணர்ந்தனர். வீரர்களின் கரங்கள் அவர்களை அறியாமலே வாட்களை ஏந்திக் கொண்டன. ஒரே அமைதி. ஒலி வரும் திக்கிலேயே படைவீரர்களின் பார்வை நின்றது. தளபதி நெடுமாறனும் தனது கூடாரத்தை விட்டு எழுந்து வெளியே வந்து நின்றான். தங்கள் வாளுக்கு ஏதோ ஒரு இரை வருகிறது என ஒவ்வொரு வீரரும் எண்ணிக் கொண்டு காத்திருந்தனர்.

ஓசை மிக அருகே வந்துவிட்டது. மேலும் கூர்மையாக அனைவரும் கவனித்தனர். குதிரை, தளபதி நெடுமாறனை நோக்கி வந்துகொண்டிருந்தது. சந்தேகமில்லை; அதன்மீது அமர்ந்திருப்பவன் வேளிர் குடியைச் சேர்ந்த வீரன்தான்! அவனைக்கண்ட பாண்டிய நாட்டார் வாளுருவிப் பாய்ந்தனர். வீரன், குதிரையை விட்டுக் கீழே குதித்தான். குதித்தவன் சுற்றிலும் பார்த்துவிட்டுச் சிரிக்க ஆரம்பித்தான். "ஒருவனை எதிர்க்க இத்தனை வீரர்களா?"—இதைக் கேட்டுவிட்டு மறுபடியும் சிரிக்கத் தொடங்கினான்.

ஆத்திரமடைந்த ஒரு பாண்டிய நாட்டு வீரன் "ஏய் நிறுத்து! சிரித்தது போதும்! பாம்பை அடிக்கப் பத்துப்பேர் கூடுவதுதான் வழக்கம்! அது பயத்தால் அல்ல—பாம்பு நழுவி விடுமோ என்ற சந்தேகத்தால்!" எனக் கூறியவாறு வாளை ஓங்கினான்.

உடனே தளபதி நெடுமாறன், அவனைத் தடுத்து நிறுத்தி குதிரையில் வந்தவனை அருகே அழைத்து. "நீ யார்? எங்கு வந்தாய்?" என விசாரித்தான்.

"நான் வேளிர்குடி வீரன். இருங்கோவேள் மன்னரே என் தலைவர். மன்னரின் புதிய நண்பர் செழியன், என்னைத் தங்களிடம் அனுப்பினார்."

குதிரை வீரனின் பதில் நெடுமாறனைத் திகைப்பில் ஆழ்த்தியது. "என்ன? வீரனே! என்ன சொல்லுகிறாய்? மன்னர் இருங்கோவேளின் நண்பன் செழியனா? ஓகோ....போர் முறையில் நீங்கள் கண்டுள்ள புதியமுறை இதுவோ? மிக மிக வேடிக்கை. மேலும் சொல் கேட்போம்!" எனக் கேலி மொழிந்தான் நெடுமாறன்.

"வார்த்தைகளைச் செலவிடுவானேன்? இதோ இருக்கிறது செழியன் தந்த ஓலை. இதைப் பாண்டிய மன்னரிடம் கொடுக்க வேண்டுமென என்னை அனுப்பினார். வழியில் தங்களைச் சந்தித்தது நல்லதாயிற்று. தாங்களே இதைப் பாண்டிய மன்னரிடம் சேர்த்துவிடுங்கள்." எனக் கூறியவாறு ஓலையை எடுத்துத் தளபதியிடம் நீட்டினான் அவன்.

தளபதி, ஓலையை ஒருமுறைக்கு இருமுறை படித்தான். பின்னர், தன்னையே நம்பாமல் தன்னுடனிருக்கும் துணைத் தளபதிகளிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னான். தளபதிகள் ஒருவர் முகத்தை ஒருவர் பரிதாபகரமாகப் பார்த்துக் கொண்டனர். நெடுமாறனின் முகம் சிவப்பேறியது. அவன் மீசைக் கற்றைகள் துடித்தன. விழிகளில் கனல்! இடக்கரத்தில் வலக்கரத்தால் ஓங்கிக் குத்திக் கொண்டு அங்குமிங்கும் நடந்தான். "துரோகி! செழியன் துரோகி!!" எனப் பலங்கொண்ட மட்டும் கத்தினான். எதிரி நாட்டு வீரன் எதிரே நிற்கிறான் என்பதையும் மறந்துவிட்டு உறுமினான். நெடுமாறனின் ஆவேசத்தையும் துணைத் தளபதிகளின் கலக்கத்தையும் வெகு அலட்சியமாகப் பார்த்துக் கொண்டிருந்த வேளிர் குடிவீரன், "நான் வருகிறேன். வணக்கம்."—எனக்கூறியவாறு குதிரையில் ஏறி உட்கார்ந்து அந்த இடத்தை விட்டு வேகமாகப் பறந்து சென்றான். அந்தக் குதிரையின் குளம்படிச் சப்தத்துடன் நெடுமாறனின் இருதயமும் போட்டி போட்டுக் கொண்டு முழங்கியது.

"சே! நினைக்கவே முடியவில்லையே — செழியன். ஒரு பெண்ணின் கண்வீச்சில் மயங்கி பாண்டிய மண்டலத்தையே காட்டிக் கொடுத்துவிட்டானே!" என்று நெடுமாறன் அதிர்ச்சியடைந்த தொனியில், புலம்பும் தோரணையில் பேச ஆரம்பித்தான். தளபதியின் கோபத்தினூடே யாரும் எதுவும் குறுக்கிட்டுப் பேசுவது சரியல்ல என்று கருதி எல்லோரும் அந்த இடத்தை விட்டு ஊமைகளைப் போல ஒதுங்கினர்.

நெடுமாறன் மட்டும் தனியே நின்று வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தான். தங்கள் வாளுக்கு வந்த வேலை போய்விடுமோ என்ற கவலையில் வாளின் உறைகளைத் தடவிப் பார்த்துக் கொண்டு நின்றனர் வீரர்கள்.

அப்போது தொலைவில் பள்ளத்தாக்கான பகுதியிலிருந்து யாரோ வருகின்ற அடையாளம் தெரிந்தது. முதலில் ஒரு கொடி மட்டும் தெரிந்தது. கொடியை உற்றுக் கவனித்தனர், சோழ நாட்டுப் புலிக்கொடிதான் அது!

புலிக்கொடி அங்கு வர வேண்டிய அவசியம்?

நெடுமாறனுக்கு மீண்டும் குழப்பம் ஆனால் அந்தக் குழப்பம் நீண்ட நேரம் நீடிக்காமல் புலிக்கொடி மிக அண்மையில் வந்துவிட்டது. குதிரைவீரர்கள் புடை சூழ அழகிய சிறுதேர் ஒன்றில் காரிக்கண்ணனார் அமர்ந்து பாசறை நோக்கிவந்து கொண்டிருந்தார். வருவது புலவர் பெருமான் என அறிந்த தளபதி நெடுமாறன் எதிர்கொண்டழைத்துக் கை நீட்டித் தேரினின்றும் இறங்கச் செய்து மரியாதையுடன் பாசறைக்குள் அழைத்துச் சென்று உட்கார வைத்தான்.

புலவர், தளபதிகளின் முகத்தையெல்லாம் பார்த்துவிட்டு, "ஏன் எல்லாருடைய முகங்களிலும் ஒரு மாற்றம்? ஒருவேளை போர் வெறியால் விளைந்த மாற்றமோ?" என ஆவலுடன் கேட்டார்

"அப்படியொன்றுமில்லை, புலவர் பெருமானே! போர் வெறி இது போன்ற மாற்றங்களை அளிப்பதில்லை. போர்க்களத்தில் முதுகிலே வேல்பட்டு வீழ்ந்தவனின் தாயின் உள்ளம் படும் வேதனையைவிட அதிகமானது இப்போது எமதுள்ளம் படும் வேதனை!"—நெடுமாறனின் பதிலைக் கேட்ட காரிக்கண்ணனார் திடுக்கிட்டார்.

"என்ன? என்ன? என்ன சொல்கிறீர்கள்?"

"தமிழ் வளர்க்கும் தங்களிடம் மறைப்பதற்கு என்ன இருக்கிறது? யாரை மீட்பதற்காக இந்தப் போர் நடைபெறுகிறது என்று தங்களுக்குத் தெரியாதா என்ன?"

"புரியும்படி சொல்லுங்கள்!"

"எதைச் சொல்வது புலவர் ஏறே! வேலினும் சிறந்தது பெண்கள் விழியென்று கவிதைகள் புனைவீர்கள். படித்திருக்கிறோம். ஆனால் நாட்டை விடச் சிறந்தவர்கள் பெண்கள் என்று கள்வெறியேறிய கவிஞன்கூடச் சித்தரித்ததில்லை- அப்படிச் சித்தரித்தால் அவன் தலை தப்புவதுமில்லை. ஆனால்; இதோ வியப்புக்குரிய வேதனைச் சேதி கேட்கிறோம் புலவரே — யாருக்காகப்

சிதம்பரம் தேர்தல் நிதி

சிறப்புக்கூட்டம்

4—10—59 ஞாயிறு காலை 10 மணிக்கு

திருச்சி தேவர் மன்றத்தில்

துறையூர் அழகமுத்து தலைமையில்

கலைஞர் மு. கருணாநிதி

("பேச்சில் என்ன இருக்கிறது?")

சிந்தனைச் சிற்பி சி. பி. சிற்றரசு

("தென்னகத்தில் இன முழக்கம்")

நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி

("கலையுலகில் நாம்")

என்ற தலைப்புகளில் விரிவுரையாற்றுவார்கள்.

கட்டணம்: ரு. 1. அணா—8. —திருச்சி மாவட்ட தி. மு. க.

பெருவழுதிப்பாண்டியர், ஊனுறக்கமின்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறாரோ — யாருக்காகப் பல வீரர்கள் களம் புகுந்து தங்கள் உயிர் கொடுக்கவும் தயாராக வந்திருக்கிறார்களோ — அந்தச் செழியன் துரோகியாகிவிட்டான்! கடைந்தெடுத்த கோழையாகிவிட்டான்! பகைவனின் நண்பனாகிவிட்டான்! அங்கேயிருக்கிறாள் ஒரு பெண். அவளை விரும்பி பிறந்த மண்ணை மறந்துவிட்டான்."

நெடுமாறன் எரிமலை போல் குமுறிக் கொண்டிருந்தான். புலவருக்கு ஒன்றும் புரியவில்லை.

"என்னால் இதை நம்ப முடியவில்லையே!" என்று கூறிய புலவரிடம் "இதோ இதைப் படித்துப் பாருங்கள்!" என்று ஓலையை அளித்தான் தளபதி.

ஓலையைப் படித்த புலவரின் கண்களிலிருந்து முத்து முத்தாகக் கொட்டிய கண்ணீர் ஓலையை நனைத்தது. விம்மும் குரலில் பேசினார். "பாண்டிய நாட்டு வீரர்களே! செழியன் துரோகியென்று இன்னும் என்னால் நம்ப முடியவில்லை!" என்று கத்தினார். "எழுத்தாணியின் கூர், மழுங்கியிருக்கிறதா இல்லையா என்பது ஓலையில் எழுதத் தொடங்கியதுமே புரிந்துவிடும். அதுபோலவே மனிதன், நல்லவனா கெட்டவனா என்று அவனுடன் பழகத் தொடங்கும் போதே தெரிந்துவிடும். நான் அறிந்த வரையில் செழியன் துரோகியென்று என்னால் ஏற்றுக்கொள்ளவே இயலவில்லை." என்று புலவர் விளக்கம் கூறினார்.

"எழுதும்போது இடையிலே கூட எழுத்தாணியின் கூர் மழுங்குவதுண்டு. நல்ல மனிதனும் சூழ்நிலையால் கெடுவதுண்டு. செழியன், அதற்கு விதிவிலக்காக இருக்க முடியாதே புலவரே!" •

—இது நெடுமாறனின் பதில்.

"நான் ஏன் குழப்பமடைய வேண்டும்? முதலில் நான் வந்த வேலையைச் சொல்லிவிடுகிறேன். சோழ மன்னர் என்னை இங்கு அனுப்பினார். போர் துவங்குவதற்கு முன்பு தங்களுடன் பேச வேண்டுமென்று அவர் விரும்புகிறார். இப்போது போர் துவங்குவது பற்றியே சந்தேகம் வளருமளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்த வேளையில் தாங்கள் கரிகாற் சோழரை சந்திப்பது எல்லா வகையிலும் நன்மை பயப்பதாகவே அமையும்." என்று புலவர் வந்த காரியம் பற்றிய பேச்சைத் தொடங்கினார்.

"சோழரைச் சந்திப்பதா? பாண்டிய மன்னரின் அனுமதி இல்லாமலா?" — நெடுமாறன் சிந்தனையிலாழ்ந்தான்.

"நட்புரிமையுடன் கூடிய இரு நாடுகள்தாமே பாண்டியமும் சோழ மண்டலமும்! ஒரு நாட்டின் தளபதி, இன்னொரு நாட்டின் மன்னரைச் சந்திப்பது தவறல்லவே! இதுபற்றி பாண்டியர் தவறாகக் கருதமாட்டார் என்பதற்கு நான் பொறுப்பு. அதுமட்டுமல்ல; நானே இந்த ஏற்பாட்டைச் செய்தேன் என்று கேள்விப்பட்டால் பெருவழுதிப் பாண்டியர், மகிழ்வாரே தவிர மறுத்துரைக்கமாட்டார்." என்று புலவர், நெடுமாறனை இணங்கச் செய்யும் அளவுக்குத் தைரியம் அளித்தார்.

பின்னர், நெடுமாறனும் கரிகாற் சோழரைச் சந்திப்பதற்குப் புறப்படத் தயாரானான். தளபதியுடன் பாண்டிய நாட்டுக் குதிரை வீரர்கள் பதின்மர் புறப்பட்டனர். வாட்டசாட்டமான குதிரையொன்றில் நெடுமாறன் ஏறி அமர்ந்து துணைத் தளபதிகளை எச்சரிக்கை செய்துவிட்டு, அவர்கள் பொறுப்பில் படையினை ஒப்புவித்துவிட்டுப் புலவருடன் புகார்த் தலைநகரம் நோக்கிக் கிளம்பினான்.

பாசறையைவிட்டு வெகுதூரம் அவர்கள் கடந்துவிட்டார்கள். இருமருங்கிலும் புதர்கள் அடர்ந்த குறுகிய பாதையொன்றில் அவர்களின் பயணம் நடந்து கொண்டிருந்தது. சுற்றுமுற்றும் சுழல்விளக்கென அலைந்து கொண்டிருந்த நெடுமாறனின் விழிகள் புதர் மறைவில் எதையோ கண்டு அசைவற்று நின்றன. திடீரெனக் குதிரையை நிறுத்தினான்.

புலவர், திகைப்படைந்து "என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

"ஒன்றுமில்லை!" என்றவாறு குதிரையிலிருந்து இறங்கினான்.

புலவர், அவனையே வியப்புடன் கவனித்துக் கொண்டிருந்தார். மீண்டும் கேட்டார்; "தளபதியாரே! என்ன தேவை? ஏன் இறங்கிவிட்டீர்?" என்று!

"இதோ இந்தப் புதரில் படர்ந்திருக்கும் பச்சிலையைப் பார்த்தீர்களா? எல்லா நோய்களையும் நீக்கவல்லது இது! இதைக் கொஞ்சம் பறித்துப் போகலாம்!" என்றான் தளபதி.

"பச்சிலையின் பெயர் என்ன?" என்று கேட்டார் புலவர்!

"வேளிர்குடியின் விஷக்கொடி!" என்று பலமாகக் கூச்சலிட்டவாறு வாளை உருவி புதருக்குள்ளே ஓங்கிக் குத்தினான் நெடுமாறன்.

"ஆ! அய்யோ!" என்று புதருக்குள்ளேயிருந்து ஒரு பயங்கர ஒலி கேட்டது. புலவர் பயந்துவிட்டார். கூடவந்த வீரர்கள் புதர் அருகே ஓடிவந்து சூழ்ந்தனர். புதருக்குள் கிடந்த உருவத்தை இழுத்து நெடுமாறன், வெளியே போட்டான்.

"யார் அது?" புலவர் கேட்டார்.

"இவன்தான் செழியன் கொடுத்த ஓலை தாங்கிவந்தவன். வேளிர்குடி வீரன். ஓலையின் விளைவு என்ன என்று பார்ப்பதற்காகப் பதுங்கியிருக்கிறான்." என்று நெடுமாறன் பதில் கூறிவிட்டு குதிரையில் ஏறிக் கொண்டான்.

மற்ற வீரர்கள், பிணத்தையெடுத்து அப்பால் மறைத்துவிட்டுத் தங்கள் குதிரைகளில் ஏறிக் கொண்டனர்.

"இந்த நிகழ்ச்சியைக் கண்ட பிறகு எனக்கு என்னமோ ஓலையின் மீதே சந்தேகம் வருகிறது!" என்றார் புலவர்.

அதற்குப் பதில் ஏதும் கூறாமல் தன் குதிரையைத் தட்டிவிட்டான் நெடுமாறன். மற்றவர்கள் அவனைத் தொடர்ந்தனர்.

* * *

சோழவேந்தனைச் சந்திப்பதற்குப் பாண்டிய நாட்டுத் தளபதியைத் தந்தை அழைத்துவரும் அதே நேரத்தில், பாண்டிநாட்டு ஒற்றனும் வீரபாண்டியை சோழனிடம் அழைத்துச் செல்லும் நோக்கத்துடன் மகள், காட்டினிடையேயுள்ள பாழ் மண்டபத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறாள். அவள் உள்ளத்தில் எத்தனையோ எண்ணங்கள். இந்த இளம் வயதில்—அதுவும் பெண்ணாகப் பிறந்த ஒருத்தி—பிறந்த நாட்டுக்காகப் பெரும் பணியாற்றுவதை நினைத்து நினைத்துத் தனக்குத் தானே பெருமை கொண்டாள். வீரபாண்டியையும் சோழரையும் சந்திக்க வைத்து இருங்கோவேளை எதிர்க்கும் போராட்டத்தை வெற்றிகரமாக முடித்துவிட்டால் செழியன் விடுதலை சுலபமாக நடந்துவிடும். பின்னர் வீரபாண்டிக்கும் தனக்கும் திருமணம்! திருமணத்திற்குப் பிறகு நாட்டுப்பணி முடிந்துவிட்டதாகப் பொருள் அல்ல! சோழ நாட்டுக்குத் துரோகம் செய்பவர்களை — செய்ய எண்ணியவர்களைக் கண்டுபிடித்துத் தண்டனை வழங்கும் வரையில் ஓய்வு கிடையாது.

இப்படியெல்லாம் சிந்தனைகளை ஓடவிட்டவாறு மண்டபத்தை நோக்கி நடந்தாள். தன் பணியினிடையே தாமரை குறுக்கிட்ட நிகழ்ச்சியை அவள் ஒரு வேடிக்கையாகக் கருதினாலும் அதனால் விளைந்த பலன்கள் அதிகமென்று அவள் நம்பினாள்.

உற்சாக மூட்டக்கூடிய இத்தனை செயல்களுக்கிடையே தந்தையின் நினைவு அவளைக் குனிப் போகச் செய்தது. "தந்தை இருங்கோவேளின் நண்பர். மகள் சோழ நாட்டுப் பெருமைக்குப் பாடுபடும் வீராங்கனை!" என்று அவள் உதடுகள் உச்சரித்தன. கண்கள் மூடிக் கொண்டன. சற்று நின்றாள் மண்டபத்துப் படிக்கட்டில்! மூடிய இமைகளின் வழியே கண்ணீர்த்துளி எட்டிப் பார்த்தது. "ஆம்! நான் என் தந்தையைக் காட்டிக் கொடுக்க வேண்டும்!" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள். பிறகு அசைவற்று அப்படியே நின்றாள்.

எவ்வளவு நேரம் அப்படி நின்றாள் என்று தெரியாது. பிறகு உணவு பெற்று விழிகளைத் திறந்தாள். என்ன ஆச்சரியம்! எதிரே ஒரு கிழவன்! சொறி பிடித்த கிழவன்! பரட்டைத்தலை! பஞ்சு நிறத் தாடி! கூனன்! குறுகிப் போய் எதிரே நின்று கொண்டிருந்தான்.

"யார்?" என்று வியப்பு மேலிட முத்துநகை கேட்டாள். அவளால் அவனைப் பார்க்கவே இயலவில்லை. அவ்வளவு கோர உருவமாகக் காட்சியளித்தான் அந்தக் கிழவன்.

என்னையா யார் என்று கேட்கிறாய்? பெண்ணே! நீ யார் என்று எனக்குச் சொல்! நிலவைக் கடைந்து செய்த சிலையில் நித்திலத்தைப் பதித்ததுபோல் காட்சி தரும் பாவையே! நீ யார்?"

கிழவனின் பேச்சை அவளால் பொறுக்க முடியவில்லை. தன்னைப் பெண் என்று எப்படிக் கண்டுபிடித்தான் என ஆச்சரியமுற்றாள்.

"நீயிருக்கும் அழகுக்கு வர்ணனைப் பேச்சு ஒரு கேடா? ஆண்-பெண் வேறுபாடு தெரியாத குருடனே! நிறுத்திக்கொள் உன் அலங்கோல வார்த்தைகளை!" என்று கடுமையாகப் பதில் கூறினாள் முத்துநகை.

"என்னடியம்மா — இப்படி ஊடல் புரிகிறாய்?" என்று நகைத்தவாறு கிழவன், முத்துநகையின் கையைப் பிடித்து இழுத்து இறுகத் தழுவிக்கொண்டான்.

அவன் பிடியிலிருந்து விடுபட முடியாமல் முத்துநகை தவித்து

[தொடர்ச்சி பக்கம்—12]

கருணாநிதி நிகழ்ச்சிகள்

அக். 1. சின்னமனூர் கோம்பை

,, 2. குமாரம்

,, 3. திருபுவனம் [மதுரை மாவட்டத்தில் நடைபெறும் இந்தக் கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் சிதம்பரம் தேர்தல் நிதி நூறு ரூபாய் வழங்கப்படும்]

,, 4. திருச்சி—சிறப்புக் கூட்டம். [சிதம்பரம் தேர்தல் நிதி]

,, 6. சென்னை—புரசவாக்கம் அண்ணா பொன்விழா,

,, 7. சென்னை நகராட்சி மன்ற பள்ளித் திறப்பு விழா.

11, 12, 13, 14—சிதம்பரம் தொகுதி.

மணமடல்

அன்புடையீர்,

வணக்கம். நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 1990 புரட்டாசித் திங்கள் 18—ஆம் நாள் (4—10—'59) ஞாயிற்றுக் காலை 9 மணி அளவில்,

செல்வன்:
ப. புகழேந்திக்கும்
செல்வி:
சுகுணாவுக்கும்

சென்னை, தியாகராயநகர் பிரகாசம் ரோடு, 5-ம் இல்லத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெறவிருக்கும் திருமண விழாவிற்குத் தாங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகைதந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

அன்பன்,
கண்ணதாசன்

கலப்படம்

மார்தட்டுகின்ற சிங்கங்களே! மாநிலங்கள் ஆறு பாரீர்!

பாஞ்சாலம்

நான் ஐந்து நதிகளின் நீரால் ஈரமாகும் நாடு; கைலாய மலைகளின் பக்கலிலே உள்ள டில்லிக்கு அடிமையான நாடு; வாளேந்திய விடுதலை வீரர்களைத் தந்த நான் இன்று டில்லியின் தாளேந்திக் கிடக்கிறேன். ஆரியர்களின் வேல், முகமதியர்களின் முரசு, மொகலாயர்களின் பீரங்கிகள், மங்கோலியர்களின் — ஹூணர்களின் மூர்க்கத்தனம் இத்தனையும் கண்டவள்: என் மண் மிதித்துத்தான், அந்தப் படை மன்னர்கள் 'புண்ணிய பூமி'யைப் போர்க்களப் பூமியாக்கினார்கள். இப்போது, சுதந்திரம் எனும் உயிர் பறிக்கப்பட்ட நான், இதுவரை முழு மூடர்களின் ஆட்சியையும் கண்டிருக்கிறேன். பழமைப் பித்தர்கள் ஆட்சியைக் கண்டிருக்கிறேன். மூர்க்கரின் ஆட்சியையும் கண்டிருக்கிறேன். ஆனால் எல்லோரையும் தூக்கியடிக்கும் விதத்திலே காங்கிரசார் ஆட்சி இருக்கக் காண்கிறேன்.

ஒரே ஒரு உதாரணம். இந்த தேசியத்தார் ஆட்சியிலே புதியதொரு செய்தி வெளிவந்திருக்கிறது. அதாவது அரசினர் சிப்பந்திகள் தங்கள் வேலை நேரத்தில் இரண்டு மணி நேரமாவது பேசாமலிருக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்திருக்கிறது, அரசாங்கம்.

ஆம்; பேசாமலிருக்க வேண்டுமாம்!

எப்போது? வேலை நேரத்தில்!

அதுவும் இரண்டு மணி நேரம் போதுமாம்!

இப்படி யாரிடம் கெஞ்சிக் கூத்தாடிக் கேட்கிறார்கள்?

தங்கள் அரசாங்கத்து சிப்பந்திகளிடம்!

ஆகா! என்னே திறமை? நிர்வாகத் திறமை? சிப்பந்திகள் பேசாமலிருக்க வேண்டுகோள் விடுக்கும் விந்தை அரசாங்கத்தைப் பாரீர்!

பைத்தியக்காரர்கள் — என்று நாக் கூசாமல் பிறருக்குப் பட்டம் கொடுப்போரே, கொஞ்சம் பாஞ்சாலத்தைப் பாருங்கள்!

வங்காளம்

வீரத்தின் பிறப்பிடம் — வாழ்வுக்கலைகளின் இருப்பிடம் — என்று புகழாரம் கொண்டவள்தான் நான். ஆனால் இன்றோ வரண்ட ரொட்டி தின்னும் வடக்கர்களிடம் அடிமைக் கொட்டிலில் முடங்கிக் கிடக்கிறேன். சுதந்திரப் போராட்ட ஏடுகளைத் திருப்புவோர், கண்களில் நீர் தேங்கிடும் செய்திகளைக் கூறுவது என் நாட்டு மறவர் வரலாறு! நெஞ்சு நெகிழ வைக்கும் நுண்கலைகள் தவழுமிடம் என் நாட்டு எல்லைதான்!

இருந்துமென்ன, இன்றைக்கு அடிமை நாடுதான்; பட்டினிக் கொடுமை அரசுக் கட்டிலிலிருந்து ஆட்சி புரியும் நாடுதான்!

அரிசியுணவு கொள்கிற காரணத்தால் வடவரின் அருவருப்பிற்கு ஆளானோம்; மாற்றாந்தாய்ப்பிள்ளையானோம். கவனிப்பார் இல்லை; எம் கடும் துன்பத்திற்குக் கண்ணீர் வடிப்பாருமில்லை!

மக்களே கொதித்தெழுந்தார்கள்; கருகிடும் கும்பிக்குக் கஞ்சி கூடத் தராத சர்க்காரை எதிர்த்து! தகாத செயல் இது என தம்பட்டம் அடித்து, உணவு கேட்டோரை நையப் புடைத்தனர்! நாடு முழுவதும் நெருக்கடி நிலைமையைப் பிரகடனப்படுத்தினர்.

ஒரே ஒரு செய்தி. உங்கள் உள்ளத்தை உருக்கிடும் செய்தி. சுதந்திர நாடென்றும், குடியரசு ஆட்சியென்றும் கூவுகின்ற நாட்டில்தான் அந்த நிகழ்ச்சி.

உணவுப் போராட்டம் உச்ச நிலையடைந்த நேரம். ஆயுதப் போலீசாரின் ஆட்சி பேயாட்டம் போட்ட நேரம். கல்கத்தாத் தெருக்களில் ஒரு விந்தை நிகழ்ச்சி நடைபெற்றது.

சந்து பொந்தான தெருக்களில் நடப்போருக்கு தனி மனிதனின் உரிமையைக் காக்கும் சுதந்திர நாடான இந்தியக் குடியரசு என்ன கட்டளை இட்டது தெரியுமா?

கையைத் தூக்கிக்கொண்டு நடக்கவேண்டுமாம்! ஆம்; ஆண் பெண் அடங்கலும் 'கைதிகளைப்'போல இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடிவரை கைகளைத் தூக்கிக்கொண்டு நடக்க வேண்டுமாம்!

ஐயோ! என் மக்களின் வாள் வலியும் தோள் வலியும் போனதோடு மட்டுமல்ல; பொல்லாங்குக்காரரின் ஆட்சியில் கைதூக்கி நடக்கும் நிலையும் வந்து சேர்ந்ததே!

மராட்டியம்

பாதுஷாக்களின் மனதிலே பயத்தை ஏற்படுத்தி, ஏகாதிபத்ய எண்ணத்தை சுடுகாடு சேர்த்த மாவீரன் சிவாஜியைப் பெற்றேன். பிறருக்கு அடிமையாகும் எண்ணம் கொள்ளாத மாவீரர்களை என் மடியிலே தவழவிட்டேன். ஆனாலும்......

சொல்லவே நாக் கூசுகிறது. என் வீரப்பிள்ளைகள் விவேகமும் கொண்டவர்கள் எனக் கூறமுடியாத முறையில் வரலாற்று நிகழ்ச்சிகள் நிகழ்ந்துவிட்டன.

மாவீரன் சிவாஜி மொகலாயர்களுக்குப் பணியாத வணங்கா முடி. அதே நேரத்தில் 'மனிதத் தன்மை'யில் நம்பிக்கையில்லாதவரின் தாசானுதாசன். இந்த 'தெய்வ பக்தி'யால்தான் அவனுக்கு அழிவு தேடிவந்தது.

அதே அழிவுக்காதை இன்றும் நடக்கிறது என் நாட்டில்! தெய்வத்தின் பெயரால் வயிறு வளர்க்கும் கூட்டம் கும்மாளம் போட்டுத் திரிகிறது.

தேவபா — என்றொரு பெண்ணும். தெய்வச் செயல்கள் பல புரியப்போகிறாள்—என்று வதந்தி கிளம்பிற்று. அப்போதே தடுத்திருக்கவேண்டும் இந்தக் காங்கிரசார் அரசு!

சரித்திரங்களை அறிந்தவர் — உலக வரலாற்றை எழுதிப் புகழ் பெற்றவர் நடத்துகிற ஆட்சியில்தான் மீண்டும் மீண்டும் இந்த 'ஏய்ப்பு' வேலைகள் நடைபெறுகின்றன.

இந்த தேவபாவைப் பார்க்க வந்த மக்கள் நெரிசலில் சிக்குண்டார்கள்; உடல் நெருங்க, இதயம் வியர்க்க, உதிரம் கொட்ட நெருக்கப்பட்டார்கள். பலர் அந்த நெரிசலிலே பலியானார்கள்!

ஆம்; 58 உயிர் பலியாயிற்று! —ஏனிந்தக் கொடுமை நடக்க அனுமதித்தது, காங்கிரஸ் சர்க்கார்? நடக்கப்போவது என்னவென்று தெரிந்தும் வாய்மூடி மௌனியாக இருந்தது ஏன்?

கடவுள் பெயரைக் கூறி காசு பறிக்கும் கூட்டத்தைக் கையும் மெய்யுமாகப் பிடித்து சிறைக்குள் அடைக்காமல் விட்டது ஏன்?

'ஏனென்று கேட்கிறீர்கள்? அது என்னிஷ்டம்! — என்று டில்லி கூவிடும் குரல் என் காதுப் பறைகளைக் கிழிக்கும் போலிருக்கிறதே!

ஆந்திரம்

அடப் பாவிகளா! தெற்கிற்கு ஒரு நீதி, வடக்கிற்கு ஒரு நீதி என்பது சரியாகத்தானே இருக்கிறது.

சுந்தரத் தெலுங்கு உலவிடும் இடம்; செவிக்கினிய கானங்கள் பிறந்த பூமி. கலைகள் அறுபத்து நான்கும் நிலைபெற்ற நாடு— என்று புகழாரங்கள் சூடப்பட்ட என்னை, புயலும், வெள்ளமும் சூழ்ந்தபோது கற்ற பாடத்தைத்தான் நான் மேலே சொன்னேன்.

வடநாட்டில் வெள்ளமென்றால், வான வீதியெல்லாம் தூள் பறக்குமே! விமானங்கள் விண்ணிலிருந்து ரொட்டி போடும்; சகாயநிதிக்கு நாடெல்லாம் அமர்க்களப்படும்.

ஆனால், நான் நீரால் சூழப்பட்டபோது, கண்ணீரால் என் மக்கள் கொடுந் துன்பம் களைய நினைக்கும்போது அசோக சக்கரத்துக் கொடிக் காவலர்களைக் காணோம்; ஆறுதல் வார்த்தை கூற பிரதமரைக் காணோம்!

புயல் அடித்தபோது, மக்கள் மாடுமனையிழந்து புலம்பும்போது இந்த நாட்டின் பிரதமர் வந்து பார்த்தாரா? தேர்தல் காலத்தில் புயல் வேகப் பயணம் நடத்தும் அவர் இந்நேரத்தில் ஓடோடி வந்து ஆறுதல் கூறாதது ஏன்?

வட நாட்டில் இப்படி ஒரு வெள்ள மென்றால் வாய் மூடிக் கிடப்பாரா அவர்? தாழ்த்தப்பட்ட நாடு என்றதால் தானே இந்த இழி நிலை? மாற்றான் வீட்டுப் பிள்ளை—என்பதால் தானே இந்த மவுனம்?

கேரளம்

ஆந்திரம் கதறிற்று, ஆதிபத்தியக்காரர்களின் நடத்தையை எடுத்துக்கூறி! நான் சொல்லுவேன், அந்த ஆதிபத்தியக்காரர்களின் ஏஜெண்டுகள் இங்கு செய்யும் அக்ரமத்தைவிட அது பெரிதல்ல—என்று. முன்பு, ஜனநாயகத்தைப் படுபயங்கரமாகக் குத்திப் பிளந்து ஈரலெடுத்தார்கள், இங்கு!

வகுப்புவாதக் கட்சி லீக்கட்சி; என்றார்கள், அன்று!

அவ்'வகுப்புவாதக் கட்சி'யுடன்தான் கூட்டு சேருகிறார்கள் இன்று!

'தலைவர்களை அனுப்பி காங்கிரசுடன் சேர்ந்து கொள்ள காலைப் பிடித்த கட்சிதானே இந்த பி. சோ. கட்சி!'—என்று ஏளனம் பாடினார்கள் காங்கிரஸ்காரர்கள், முன்பு.

பி. சோ—கட்சிக்காரர்களுடன் கொஞ்சிக் குலவி, 'தேர்தல் கூட்டாஞ்சோறு' ஆக்கித் தின்ன வெறியெடுத்துத் திரிகிறார்கள்—இன்று.

உளறிக்கொட்டும் கட்சி உலகிலேயே ஒன்றிருக்குமானால் அது வடவருக்குக் கால் பிடிக்கும் காங்கிரஸ் கட்சி என்பதுதான் என் அனுபவம்.

தமிழ்நாடு

என் மண்ணிலும் விண்வரை புகழ் முட்டச் செய்த வீரர்கள் வாழ்ந்தார்கள்; ஆனால் இன்றோ டில்லியின் கூத்துப் பாவைகளாய் இருக்கிறார்கள். வடக்கே எல்லாம் தந்துவிட்டு, கையது கொண்டு மெய்யது பொத்தி இந்நாட்டு மக்கள் முடங்கிக்கிடக்கிறார்கள். இது அரசியல்!

சாதாரண நாட்டு நடப்பு இதோ:

'இப்போது ஒரு கொலை வழக்கு சென்னை மாநிலத்தைக் கலக்கி வருகிறது. சூரியநாராயணனைக் கொலை செய்து பணத்தைக் கொள்ளையடித்தனர் சிலர். அதில் இரண்டு வட நாட்டுக்காரர்கள். ஒரு தென்னாட்டுக்காரன். பணத்தை இரண்டு வடவர்களும் சரியாகப் பங்கிட்டுக் கொண்டார்களாம். இந்த அப்பாவி தென்னாட்டுக்காரனுக்குச் சரியான பங்கு கிடைக்கவில்லை. வடவர்களும் இவனை மிரட்டி ஏமாற்றிப் பெரும் பணத்தோடு ஓடிவிட்டார்களாம்!

'இந்தக் கொலைக்கேஸில் இரண்டு பேர் மாத்திரமே சிக்கியிருக்கிறார்கள். அதில் ஒருவன் அந்தத் தென்னாட்டான்!

'இந்தக் கொலைக்கேஸில் இரண்டு பேருக்குத் தூக்குத் தண்டனை விதித்திருக்கிறார்கள்! அதில் ஒருவன் நம் தென்னாட்டான்!

'அடப்பாவி! —கொலை செய்து கொள்ளையடிக்கும் தொழிலில் கூடத் தென்னாட்டானைத் துரத்துகிறதே துரதிர்ஷ்டம்!' — என்று சாதாரண தமிழ்மகன் உணர்ந்து பேசுகிற காட்சி பெருகி வருகிறது!

அன்புள்ள மாதவி,

வளரும் அரசியலில் மன்னனுக்கும் மக்களுக்குமிடையே போராட்டம் எப்படித் தவிர்க்க முடியாதது ஆயிற்று என்பதையும், மக்கள் தங்கள் உரிமைகளைப் பார்லிமெண்ட் மூலம் இங்கிலாந்தில் எப்படி நிலைநிறுத்திக் கொண்டார்கள் என்பதையும் சென்ற கடிதத்தில் விளக்கியிருந்தேன். முதலாம சார்லஸ் மன்னன் சிரமிழந்தான்; தன் மதக்கோட்பாட்டினை மக்கள்மேல் திணிக்க முயன்ற இரண்டாம் ஜேம்ஸ் முடியிழந்தான். மன்னர்களை ஆக்கவும் அழிக்கவுமான அதிகாரத்தை மக்கள் சபையான பார்லிமெண்ட் பெற்றது. ஜேம்ஸுக்குப்பின் வந்த பிரிட்டிஷ் மன்னர்கள் பார்லிமெண்டின் கோரிக்கைகளை மதித்து, தங்கள் பதவியைக் காப்பாற்றிக் கொண்டனர். மக்களின் அரசியல் அதிகாரமே மேலானது என்ற உண்மை அங்கீகாரம் பெற்றது.

கடல் கடந்த வாணிபத்தால் பிரிட்டனில் வளம் கொழித்தது. செல்வம் மிக்க மத்திய வர்க்கம் பிரிட்டிஷ் அரசியலிலும், அதன் காரணமாக பிரிட்டிஷ் காமன்ஸ் சபையிலும் அதிகாரம் பெற்றது. இவர்கள் தங்கள் வியாபார நலன்கள் பாதிக்கப்படாமலிருக்க அமைதியான சூழ்நிலையைப் பெரிதும் விரும்பினர். போர்கள் ஏற்படுவதை வெறுத்தனர். ஆனால் வெளிதேசங்களால் தங்கள் வியாபார நலன்களுக்குக் குந்தகம் விளைந்தபோது, அந்நாடுகள்மீது போர் தொடுத்து அவற்றின் பலத்தை ஒடுக்கித் தங்கள் வியாபார நலன்களைப் பாதுகாத்துக்கொள்ள முனைப்புக் காட்டினர். ஆகவே வெளிநாடுகளோடு பிரிட்டன் கொண்டிருந்த உறவை அந்நாட்டு வியாபாரிகளே நிர்ணயித்தனர். பிரிட்டனின் வியாபாரத்திற்கும் அதனால் அது பெற்று வரும் அரசியல் பலத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்க முனைந்த நாடுகளில் பிரான்ஸ் குறிப்பிடத்தக்கது. ஆடம்பர வாழ்க்கையால் அரசாங்கக் கஜானாவைக் காலியாக்கிய பதினான்காம் லூயி, பிரிட்டன் கடல் கடந்து காலனிகள் ஏற்படுத்துவதைக் கண்டு அஞ்சினான். வியாபாரத் துறையிலும் காலனிகள் ஏற்படுத்துவதிலும், பிரிட்டனுடன் போட்டியிட்ட மற்றொரு நாடு ஸ்பெயின். அந்நாடு கத்தோலிக்க மதத்தைத் தழுவியதால், கத்தோலிக்க மதகுருவான போப்பாண்டவர் அமெரிக்கக் காலனிகள் ஸ்பெயின் நாட்டுக்கே சொந்தமானவை எனப் பிரகடனப்படுத்தினார். பிராடஸ்டண்ட் மதத்தைத் தழுவிய பிரிட்டன் போப்பாண்டவரின் அறிக்கையை அலட்சியப்படுத்தியது. வெளிநாடுகளில், குறிப்பாக அமெரிக்காவிலும் இந்தியாவிலும் காலனிகள் நிறுவி சாம்ராஜ்யமொன்றைக் கட்டுவதில் பிரிட்டனுக்கும் பிரான்சுக்குமிடையே கடுமையான போட்டி தோன்றியது. இந்தப் போட்டி உலக வரலாற்றில் — அதன் போக்கில் — மாறுபாட்டை ஏற்படுத்திய முக்கிய நிகழ்ச்சியாகும்!

பிரிட்டிஷ் மன்னர்களின் மதக் கோட்பாட்டை அங்கீகரிக்காத யாத்ரீகத் தந்தைகள் புது உலகமான அமெரிக்க பூமியைச் சென்றடைந்து குடியேறிய நிகழ்ச்சியை முன்பே உனக்கு எழுதியிருந்தேன். அவர்கள் வட அமெரிக்காவின் கிழக்குக் கரையில் 'புதிய இங்கிலாந்து காலனிகள்' என்ற காலனிகளை ஏற்படுத்தினர். அந்தப் பகுதி இதரப் பகுதிகளைவிட பிரிட்டிஷ் தீவுகளுக்கு அருகாமையில் இருந்ததோடு, அங்குள்ள கால நிலையும் ஏறத்தாழ பிரிட்டிஷ் கால நிலையோடுஒத்திருந்ததால், பிரிட்டிஷ் மக்கள் அங்கு சென்று விருப்போடு குடியேறினர். பிரஞ்சுக்காரர்கள் சற்று மேற்கே செயின்ட் லாரன்ஸ் நதிக்கரை, மிஸிஸிபி, ஒஹியோ ஆகிய நதிகளின் கரைகள் ஆகியவற்றில் தங்கள் காலனிகளை ஸ்தாபித்துக் கொண்டனர். செவ்விந்தியர்களோடு பிரஞ்சுக்காரர்கள் உறவேற்படுத்திக்கொண்டு, பிரிட்டிஷ் காலனிகள் மேற்குத் திசைப் பகுதியில் வளருவதைத் தடுத்தனர். இதனால் பிரிட்டிஷ் பிரஞ்சு மோதுதல் புது உலகமான அமெரிக்காவில் தவிர்க்க முடியாதது ஆயிற்று!



மனிதனின் கதை

பி. சி. கணேசன்

52. சாம்ராஜ்யப் போராட்டம்

பிரிட்டிஷ் பிரஞ்சுக்காரர்களுக்கிடையே ஏற்பட்ட இந்த ஆதிக்கப் போராட்டம் இந்தியாவிலும் உச்சக் கட்டத்தை அடைந்தது. அதற்கேற்ற அரசியல் சூழ்நிலையும் அப்பொழுது இந்தியத் துணைக் கண்டத்தில் இருந்தது. அக்பருக்குப் பின், பல்வேறு இனத்தவரையும் மதத்தவரையும் ஒரு குடைக்கீழ் ஆளும் மன்னர்கள் தோன்றவில்லை. ஔரங்கசீப்பின் குறுகிய கொள்கைகள் மொகலாயப் பேரரசைச் சிதைத்துச் சின்னாபின்னப்படுத்தி வைத்திருந்தது. சிவாஜி கண்ட மராட்டிய சாம்ராஜ்யமும் வெகு காலம் பலம் பெற்றுத் திகழவில்லை. வலிமை படைத்த மன்னர்கள் இல்லாது போகவே வெளிநாட்டுக் கொள்ளைக்காரர்கள் இந்நாட்டைத் தங்கள் வேட்டைக் காடாக்கிக் கொள்ளுவது சுலபமாயிற்று. பாரசீக மன்னன் நாதிர் ஷா வட இந்தியாவின் மீது படையெடுத்தான். படையெடுத்தான் என்பதைவிடக் கொள்ளையடித்தான் என்பதே பொருந்தும். பொன்னையும் பொருளையும் அள்ளிச் சென்றான். டெல்லியிலிருந்த ஷாஜஹானுடைய மயிலாசனத்தைக் கவர்ந்து சென்றவனும் அவனே! அவனுக்குப் பிறகு தொடர்ந்து பல ஆஃப்கானியத் தலைவர்கள் இந்தியத் துணைக் கண்டத்தின் மீது படையெடுத்தனர்.

இந்தியத் துணைக்கண்டத்தின் இந்தச் சூழ்நிலை பிரிட்டிஷ் வர்த்தகர்களுக்கும் பிரஞ்சு வர்த்தகர்களுக்கும் ஏற்றதாக இருந்தது. தங்கள் வர்த்தக நிலையங்களுக்குப் பாதுகாப்பு என்ற பெயரில் ஆயுதக் கிடங்குகளைக் கட்டினர். போராடிய மன்னர்களுக்குத் துணைபுரியும் பாவனையில் சுதேசிகளைக் கொண்டே பெரும்படைகளைத் திரட்டிக் கொண்டனர். அப்படைகளுக்குப் பயிற்சியளிக்க ஐரோப்பியத் தளபதிகள் தருவிக்கப்பட்டனர். அவர்களைத் தொடர்ந்து ஐரோப்பிய ராணுவம் மெதுவாக இந்திய மண்ணில் இறக்குமதி செய்யப்பட்டது. வியாபாரம் நடத்த வந்த கம்பெனிகள். ராணுவ பலத்தோடு, இந்திய மன்னர்களை ஆட்டிப் படைக்கும் அரசியல் சக்திகளாயின. இந்திய சிற்றரசர்கள், கம்பெனியின் ஆதரவின்றி வாழ முடியாத பொம்மை ராஜாக்களாயினர். எதிர்க்கத் துணிந்த இருண்டொருவர் விபீஷண சாகசத்தால் வீழ்த்தப்பட்டனர். இந்திய மண்ணில் கிழக்கிந்தியக் கம்பெனியும், கிழக்கிந்திய பிரஞ்சுக் கம்பெனியும் பலமாக மோதிக் கொண்டன. இந்தக் கம்பெனிகளின் நலன்களைக் காப்பாற்ற முடிவில் பிரிட்டனும் பிரான்சுமே போரில் குதிக்கும் நிலை பிறந்தது. வரலாற்றுப் புகழ்பெற்ற 'ஏழாண்டுப் போர்' இதன் காரணமாகத்தான் ஏற்பட்டது. பண்டைய வரலாற்றில் கடலாதிக்கம் பெற ரோமுக்கும் கார்த்தேஜுக்கும் போர் மூண்ட கதையைப்பற்றியும், அப்போரில் ரோம் வெற்றி பெற்றதால் ரோம் நாடு ஒரு சாம்ராஜ்யமே அமைக்க முடிந்தது பற்றியும் முன்னர் நான் எழுதியுள்ளதை அதற்குள் நீ மறந்திருக்க மாட்டாய் என எண்ணுகிறேன். அதேபோல் ஏழாண்டுப் போரில் பிரிட்டன் பெற்ற வெற்றி, அந்நாட்டைக் கடலரசியாக்கியது; உலகெங்கும் காலனி ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொடுத்தது; சூரியனே அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் உதயமாயிற்று!

இந்த மகத்தான சாதனைக்குக் காரணமாயிருந்தவர் வில்லியம் பிட் என்ற தலைசிறந்த பிரிட்டிஷ் ராஜதந்திரி.

இருபத்தேழு வயது இளைஞராக இருந்தபொழுது வில்லியம் பிட் காமன்ஸ் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது பேச்சாற்றலும் வாதத் திறமையும் பார்லிமெண்டையும் அரசியல் வட்டாரத்தையும் பிரமிக்க வைத்தன. பிரிட்டிஷ் அரசாங்கம், பிரிட்டிஷ் வியாபார நலன்களை புறக்கணிப்பதாகக் குற்றம் சாட்டி, அரசாங்கத்தினுடைய போக்கை வன்மையாகக் கண்டித்தார். பிரிட்டனின் எதிர்காலமே அந்நாட்டின் வியாபார நலனைப் பொறுத்திருப்பதால், அதில் அக்கரை காட்டாமல் வாளாவிருப்பது தற்கொலைக் கொள்கையாகும் என எச்சரித்தார். அவருடைய பேச்சு பிரிட்டிஷ் மக்களையும் அரசியல்வாதிகளையும் சிந்திக்க வைத்தது. வில்லியம் பிட் பிரிட்டனின் பிரதம மந்திரியானார்!

ஏழாண்டுப்போர் ஆரம்பித்தபோது பிரிட்டிஷ்காரர்கள் யுத்தத்துக்குத் தயாராக இல்லை. ஆரம்பத்தில் பிரிட்டனின் கை சற்று சளைத்திருந்தது. அவ்வமயம் யுத்த மந்திரி பொறுப்பை

[தொடர்ச்சி பக்கம்—10]

தலைமைக் கழக அறிக்கை:

சிதம்பரம் சட்டமன்ற தனித் தொகுதி இடைத் தேர்தல்

தேர்தல் நிதி பற்றி வேண்டுகோள்

மாயூரம் பொதுக்குழுவில் மேற்கொண்ட முடிவுப்படியும், 11—9—59-ல் சென்னையில் கூடிய செயற்குழு வலியுறுத்தியுள்ளபடியும், சிதம்பரம் தனித்தொகுதி இடைத் தேர்தல் நிதியாக ஒவ்வோர் மாவட்டக் கழகமும் ரூபாய் ஐந்நூறு (500)க்குக் குறையாமல் உடன் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். மாவட்டக் கழகங்கள் தாமதமின்றி நிதி அனுப்பிவைக்கும் வகையில் மாவட்டங்கள்தோறும் உள்ள கிளைக்கழகங்கள் தங்கள் தங்கள் அன்பளிப்பை அந்தந்த மாவட்டக் கழகங்களுக்கு உடன் அனுப்பிவைக்குமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

தென் ஆற்காடு மாவட்டத்தை சேர்ந்த ஒவ்வோர் சிற்றூர்—பேரூர் கிளையும் ரூ 25-க்குக் குறையாமலும், ஒவ்வோர் நகரக் கிளையும் ரூ 50-க்குக் குறையாமலும் தெ. ஆ மாவட்ட தி. மு. கழகச் செயலாளருக்கு இத் திங்கள் இறுதிக்குள் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

தெ. ஆ. மாவட்டம் தவிர்த்த மற்ற மாவட்டக் கழகங்களிலிருந்து அனுப்பும் தொகையும் தனிப்பட்ட அன்பர்கள், மனமுவந்து அனுப்ப விரும்பும் நன்கொடையும், 'பொதுச்செயலாளர், தி. மு. க. தலைமை நிலையம், 'அறிவகம்', சென்னை—13' என்ற முகவரிக்கு அனுப்புமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

'அறிவகம்' சென்னை-13
21—9—1959

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

சுழல் விளக்கு

மாலுமி

டி. கருணாகரன்; மதுரை.

(?) அற்புதங்கள் செய்வதாகச் சொல்லி, 58 பேருடைய மரணத்திற்குக் காரணமான தெய்வப் பெண்ணைக் கைது செய்துவிட்டார்களாமே?

ஆனால். அவள் தன் அதி அற்புத மந்திர சக்தியால் சிறையிலிருந்து இன்னும் தப்பிடவில்லையா!

பி. குணசீலன்; சென்னை—4

(?) சினிமாக்காரர்களுக்கும் அரசியலாருக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?

இதற்கு நேரிய விடை கொடுத்தும், பல்லாண்டுகாலமாக மீண்டும் மீண்டும் நாட்டிலே எழுப்பி எழுப்பி-அடங்கி விடுகின்ற கேள்வியாயிற்றே, இது! "சினிமாத்துறையிலே அநேக தொல்லைகள்—குறைகள் இருக்கலாம். அவைகளை அரசியலாருக்கு எடுத்துரைத்தால் தான் குறைகள் நீங்க வாய்ப்பு ஏற்படும். ஆகவே, சினிமாத் துறையில் இருப்பவர்களும் அரசியலில் பங்கெடுக்கவேண்டும்; தேர்தல்களிலும் போட்டியிடவேண்டும்; வெற்றிபெற வேண்டும்!"—இப்படி மீண்டும் விளக்கம் தந்திருக்கிறார் சென்னை சட்ட மன்ற ஆளுங் கட்சி உறுப்பினர் ராஜா. சர். எம். ஏ. முத்தையா (செட்டியார்). தென்னிந்திய பிலிம் வர்த்தக சபையின் புதிய கட்டிடத்தைத் திறந்துவைத்த போதுதான் இந்த உண்மையை அவர் வெளியிட்டிருக்கிறார்.

கே. மோகனவேல்; வேலூர்.

(?) "திராவிட நாடு கேட்பது தன் தலைக்குத் தானே கொள்ளி வைத்துக் கொள்வதாகும்" என்று தந்தை பெரியார் எங்கள் ஊரில் பேசியிருக்கிறார்; இனியும் நீங்கள் திராவிடநாடு கேட்கிறீர்களா?

திராவிட நாட்டின் படத்திற்குத் தீ வைத்துக் கொளுத்துவதைவிட, அதற்காகப் போராடி தன் தலையிலேயே தீவைத்துக் கொள்வதே மேல் என்றுதான் பதில் சொல்லத் தோன்றுகிறது!

ஜி. கே. வேலன்; சத்திரவாடி.

(?) பேராசிரியர் அன்பழகனின் கேள்வி ஒன்றுக்கு காமராசரே நேரிடையாக பதில் சொல்லியிருக்கிறாரே சட்டமன்றத்தில் அது எப்படி முடிந்தது?

எப்போதும் காமராசரின் சார்பில் சுப்பிரமணியனாரே பதில் சொல்வாரே—என்கிற காரணத்தால் இந்த வியப்பு தோன்றியிருக்க வேண்டும் உங்களுக்கு! தெரிந்து கொள்ளுங்கள்; தி மு. கழகம் 'சட்டசபைக்குச் சென்று என்ன சாதித்து விட்டது?' என்று கேட்கிறார்களே; அத்தகைய சாதனைகளில் ஒன்றுதான் பேசாத காமராசரையே பேச வைத்திருக்கிறது!

பி. தெட்சணா; அமைந்தகரை.

(?) நியாயவிலைக் கடைகள் எங்கே இருக்கின்றன?

தகிக்கும் வெய்யலில், கையிலிருக்கும் பையைக் காலணிகளாகப் பயன்படுத்தி — கைகளையே குடையாக விரித்து-நகரத்தின் பிளாட்பாரங்களில் நீண்ட 'கியூ'வை நீங்கள் எங்காவது கண்டால் அதன் கோடியில் நீங்களும் நின்றுவிடுங்கள். நிச்சயம் அதன் மறுகோடியில் ஒரு நியாயவிலைக் கடை இருக்கும்.

பி. சுப்பையா; புதுடெல்லி.

(?) அண்மையில் கொண்டாடப்படவிருக்கும் செஞ்சீனத்தின் பத்தாவது குடியரசுதின விழாவில் கலந்துகொள்ள இந்தியாவிற்கு அழைப்பு வரவில்லையாமே; ஏன்?

தலாய்லாமாவுக்குத் தந்த மரியாதை இந்த 'முறையில்' இந்தியத் துணைக்கண்டத்திற்குத் திரும்பக் கிடைக்கிறது; அவ்வளவுதான!

சி. வரதராசன்; நுங்கம்பாக்கம்.

(?) சென்னை நகரத்தில் அதிக நெருக்கமுள்ள பகுதி எது?

அமைச்சர் மாணிக்கவேலர் ஒப்புக்கொள்கிறபடி நகரத்திலுள்ள மருத்துவ மனைகள் தான்! 1125 பேருக்கே இடமுள்ள 'ஜெனரல்' மருத்துவ மனையில் 3700 நோயாளிகளைச் சேர்க்கிறார்கள். 724 பேருக்கே இடமுள்ள 'ஸ்டான்லி' மருத்துவ மனையில் 2600 நோயாளிகள்; 515 பேருக்கே வசதியுள்ள திருவல்லிக்கேணி கஸ்தூரிபாய் நினைவு மருத்துவ மனையில் 2000 நோயாளிகள்—இப்படி அங்கெல்லாம் ஜனப் பெருக்கம் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே போகிறது!

உமாகாந்தன்; திருச்சி.

(?) நேருவின் அரசியல் வாழ்க்கையில் தோல்விகள் உண்டா?

அவருடைய அரசியல் வாழ்க்கையே ஒரு தோல்விக் கதை தான்; பாக்கிஸ்தான் கிடைக்காது என்று கூறிய அந்தக் காலத்திலிருந்து திராவிடஸ்தான் கொடுக்கமுடியாது எனக் கூறும் இந்தக்காலம் வரை!

அன்புக்கரசன்; உறந்தை.

(?) 'கல்யாண வீடுகளில் சினிமாப் பாட்டுகள் வைக்கிறார்களே?'—என்று இங்கு வருத்தப் பட்டாரே முதலமைச்சர் காமராசர்?

அவர் வருத்தப்படுவது, பாடுகிற பாட்டெல்லாம் தி. மு. க. கருத்தையே பாடித் தொலைக்கிறதே —என்பதற்காகத்தான்! 'கைராட்டையே ஆயுதம்; கதராடையே சோபிதம்' — என்ற சினிமாப் பாட்டைப் போட்டால் 'சினிமாப் பாட்டில்லாத கல்யாணம் ஒரு கல்யாணமா?' — என்று கூறுவார்.

முஸ்தபா; சென்னை-6.

(?) வ. உ. சி-க்கு சிலை கட்டத் திட்டமிட்டு இரண்டு வருடமாகிறதே? இப்போது எந்த வேலை நடக்கிறது?

அஸ்திவார வேலைதான் நடக்கிறது. அடுத்த தேர்தலின் போது கண்டிப்பாகக் கட்டி முடித்துவிடுவார்கள். ஏனென்றால் அந்தப் பக்கத்து ஓட்டுகள் சிதறாமல் மாட்டுப் பெட்டியில் விழவேண்டுமல்லவா?

மனிதனின் கதை...

[9—ம் பக்கத் தொடர்ச்சி]

பிட் ஏற்றார். போர்ப்படை நடத்தும் பொறுப்பைத் தக்காரிடம் ஒப்படைத்து வெற்றி வாகையும் சூடச்செய்தார். 'பிட்டைச் சந்தித்து உரையாடினால் கோழையும் வீரனாவான்' என்ற வாசகமொன்றும் வரலாற்றில் உண்டு. தன் நாட்டு மக்களிடத்தில் அசையாத நம்பிக்கை கொண்டு அவர்களையும் தம் ஆற்றலில் நம்பிக்கை கொள்ளச்செய்து, செயல்பட வைத்துப் பெரிய சாம்ராஜ்யத்தைக் கட்டி முடித்த அரசியல் செயல் வீரர் பிட்! இவ்விஷயத்தில் வின்ஸ்டன் சர்ச்சிலுக்கும் வில்லியம் பிட்டுக்கும் உள்ள ஒற்றுமையை நீ எண்ணிப்பார்!

பிரஞ்சுக்காரர்களை அமெரிக்காவிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் விரட்டிவிட பிட் திட்டமிட்டார். பிரஞ்சுப் படைகளை ஐரோப்பாவிலேயே போரில் ஈடுபடுத்திவிட்டால், இந்தியாவிலும் அமெரிக்காவிலும் அவர்கள் பலம் குறைந்து காலனிகளை இழந்துவிடுவார்கள் என்பது பிட்டின் திட்டம். ஆகவே பிரஷ்யாவுக்கும் பிரான்சுக்குமிடையே இருந்த பகையை வளர்த்து, பிரஷ்ய மன்னனை ஃபிரடரிக்குப் பொருளுதவி செய்து, பிரஞ்சு—பிரஷ்யப் போரை சூடுபிடிக்கச் செய்தார். படைகளுக்குக் கூலி வழங்கப் பணமின்றித் திண்டாடிக்கொண்டிருந்த ஃபிரடரிக், பிட் செய்த பண உதவியால் போரை வெகு சுவாரஸ்யமாக நடத்தினான் பிட்டின் ராஜதந்திரம் வெற்றிபெற்றது. பிரஞ்சுக்காரர்கள் அமெரிக்காவிலும் இந்தியாவிலும் தங்கள் காலனிகளை இழந்தனர்.

பிரஞ்சுக்காரர்களிடம் சிறந்த தளபதிகள் இருந்தார்கள் கனடாவில் மான்ட்காமும், இந்தியாவில் டூப்ளேயும் பிரஞ்சுப் படைகளைக் கண்காணித்தார்கள். ஆனால் ஐரோப்பாவில் நடந்த யுத்தம், தாயகத்திலிருந்து அதிகமான உதவியை அவர்கள் எதிர்பார்க்க முடியாமல் செய்துவிட்டது. பிட்டும் சிறந்த பிரிட்டிஷ் தளபதிகளை அவர்களோடு போர்புரிய அனுப்பி வைத்தார். கானடாவில் உல்ஃப் தலைமையில் பிரிட்டிஷ் படை செயல் பட்டது. இந்தியாவில் ராபர்ட்கிளைவ் பிரிட்டனுக்கு வெற்றி தேடித் தந்தார். 1757ல் நடந்த பிளாசிச் சண்டையும், 1759ல் க்யூபெக் அருகே நடந்த போரும் இந்தியாவிலும் அமெரிக்காவிலும் முறையே பிரிட்டனின் கையை ஓங்க வைத்தது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஆணிவேர் ஆழமாகப் பதிந்து கிளை வேர்களையும் சல்லிவேர்களையும் விட்டு ஸ்திரப்படுத்திக் கொண்டது. 1763-ல் நடந்த பாரிஸ் ஒப்பந்தம் பிரிட்டனின் சாம்ராஜ்ய அந்தஸ்தை சந்தேகத்துக்கு இடமின்றி ஸ்தாபித்தது.

பிட் பிரிட்டனை ஒரு மாபெரும் சாம்ராஜ்யமாக்கினார். போரின் விளைவு பிரஞ்சுக் கஜானாவைக் காலியாக்கியது போலவே, பிரிட்டிஷ் வரலாற்றில் மட்டுமல்ல, உலக வரலாற்றிலேயே, ஒரு புதிய சக்தியை — ஒரு புதிய வாழ்க்கை வழியைத் தோற்றுவித்தது. அது என்ன என்பதை அறிய நீ ஆவலாக இருப்பாய் இடையில் ஒரு வாரம்... அடுத்த கடிதத்தில் என் விளக்கமான பதில்.

அன்புள்ள,

அகத்தியன்.

நூலேணி

மயிலாடும் பாறை

ஆசிரியர்: தென்னரசு.

வெளிநாடுகளில் யானைத் தந்தம் வியாபாரம் செய்யும் வணிகர் ஒருவர், ஒரு நடன மாதுவைத் திருமணம் செய்துகொள்கிறார், ஒரு நிபந்தனையின் பேரில்! அவள் மீண்டும் அரங்கில் ஆடக்கூடாது—என்பதே அந்த நிபந்தனை! தன் குருவின் வேண்டுகோளுக்கிணங்க நிபந்தனையை மீறி, அரசவையில் மாற்றுப் பெயருடன் அவள் ஆடுகிறாள், ஆளன் ஊரிலில்லாத வேளையில்! என்றாலும் இந்தச் சேதி அவனுக்கு எட்டுகிறது. ஊர் திரும்புகிறான். தன் மனைவியைவிட நன்றாக ஆடக்கூடியவள் இருக்கிறாளா? — என எண்ணி, அவளுடன் தன் மனைவி போட்டியிட்டு ஆடுவாள்—எனவும் அரசர் முன் அறிவித்து விடுகிறார். பின்னர் தெளிவடைகிறார், தன் மனைவி தான் முன்னரும் அரசவையில் ஆடியது என! மகிழ்ச்சியோடு வீடு திரும்புகிறார். ஆனால் அவள் நிபந்தனையை மீறிவிட்ட செயலுக்கு வருந்தி, விஷ எண்ணையை பூசிக்கொண்டு வெளியேறிவிடுகிறாள். சிலகாலம் கழித்து மயில்கள் காவல் காத்த ஒரு பாறையில் அவள் சடலம் கண்டெடுக்கப்படுகிறது.

நடந்த இக்கதையை அருமையான கட்டுக்கோப்புடன், அழகு தமிழ் நடையில் நமக்குத் தருகிறார் தோழர் தென்னரசு. நடனப்பெண்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும்போதும், கதைத் தலைவியின் முடிவு பற்றிக் கூறும்போதும் நம்மை ஒரு இனந்தெரியாத உணர்ச்சி ஆட்டிப்படைக்கிறது.

உள்ளமுருக்கும் நடையாலும், நிகழ்ச்சிக் கோவைகளாலும் நம்மை கதை நடந்த காலத்திற்கே அழைத்துச் செல்கிறார் ஆசிரியர்.

படித்துணர்ந்து சுவைக்க வேண்டிய கதை!

[கிடைக்குமிடம்: காவியக் கழகம், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை 2. விலை ரூ. 1-50. பக்கங்கள் 95.]

பத்ரகாளியின் நடமாட்டம்

எழுதியவர்; வேலவன்.

ஒன்றன் பின் ஒன்றாக ஐந்து கொலைகள் நடக்கின்றன. எல்லாக் கொலைகளையும் செய்தவர் ஒருவரே என்று எண்ணுமாறு பத்ரகாளி உருவம் கொலை செய்யப்பட்டவர்மீது சுமத்தப் படுகிறது. போலீசாரின் சந்தேகம் பலர் மீது விழுகிறது. ஊரெல்லாம் அமர்க்களமாகிறது. கடைசியில் துப்பறியும் பசுபதி உண்மைக் குற்றவாளியைக் கண்டு பிடிக்கிறார். கொலைகளை ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்தி எல்லாம் திரண்ட செல்வத்தைத் திருட்டுத் தனமாய் உரிமையாக்கிக் கொள்வதற்குத்தான் என்பது நிரூபிக்கப்படுகிறது.

பயங்கரமான வர்ணனைகளும் மேலும் படிக்கத் தூண்டும் சுவையும் கூடி நல்ல பொழுதுபோக்கு நூலாக விளங்குகிறது. எனினும் தமிழகச்சூழ்நிலை உண்டாகமறுக்கிறது.

[வெளியீடு: பிரேமா பிரசுரம், சென்னை 24. விலை ரூ. 1-50]

நாடாற்றேர் நலிவு போக்க நடிகரின் பொதுப் பணி!

ராஜாமணி பிக்சர்ஸ் ஆரம்பவிழாவில் சிவாஜி கணேசன், அவருடைய அன்னையார் திருமதி ராஜாமணி, எம். ஆர். சந்தானம், மோகன், டைரக்டர் பீம்சிங்.

"நடிகர்கள் நாடாள முடியுமா; பொதுப் பணி புரிய முடியுமா?" — இப்படிக் கேள்விகள் நேர்மையற்றவர்களின் நாவிலே நடமாடிக் கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

நாடாள்வதற்கென்றே திட்டமிட்டுப் பிறந்தவர்கள் இருக்கிறார்கள்; அவர்களுக்கு அரசியல் அரங்கம் முழுச் சொத்தாகும் — என்ற பாணியிலே பேசுகிறார்கள், அவர்கள்!

டாக்டர் தொழில் புரிபவன் அரசியலில் ஈடுபட அவர்கள் எதிர்ப்புக் காட்டுவதில்லை.

வக்கீல்கள் அரசியலில் ஈடுபட்டால் ஆட்சேபம் தெரிவிப்பதில்லை.

அறிவியல் தொழிலானாலும் கலைத் தொழிலானாலும் அதிலேயும் ஈடுபட்டு அரசியலிலேயும் ஈடுபட்டால்? எதிர்ப்பவர்கள் இல்லை! ஆனால் நாடகம் ஆடுபவன்—நடிகன—அரசியலில் ஈடுபட்டால்....? சில அரசியல்வாதிகளிடையே சலசலப்பு!

ஏன், நடிப்பும் ஒரு கலைத் தொழில்தானே? அவன் அரசியலில் ஈடுபட்டால் அரசியலின் புனிதத் தன்மை கெட்டு விடுமா? அவர்களிடமிருந்து இதுவரை இதற்குப் பதிலில்லை.

மனிதனின் பலவீனத்தைத் தூண்டி நடிகன் வாழ்வதால், அவன் மனிதனை உயர்த்தும் அரசியலில் ஈடுபடக் கூடாதென்றால், மனிதனின் நோயை வைத்தே பணம் சம்பாதிக்கும் டாக்டர்கள் ஈடுபடலாமா? பொய்யையும் புரட்டையும் 'சர்வ சாதாரணமானவைகளாக'க் கருதும் வக்கீல்கள் ஈடுபடலாமா?

வக்கீலுக்கும், டாக்டருக்கும், மாணவப் பருவத்தைக் கடந்தவனுக்கும் அரசியலில் ஈடுபட என்ன உரிமை இருக்கிறதோ அவ்வளவு உரிமை நடிகனுக்கும் உண்டு!

இந்த உரிமையை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டவர்கள் மேனாட்டார்தான்! 'கலைஞர்கள் அரசியலில் ஈடுபடலாமா?'—என்று கேட்போரும் இல்லை. 'கலைஞர்கள் அரசியலில் ஈடுபடக் கூடாது' — எனும் குறுகிய புத்தி படைத்தோரும் அங்கு இல்லை.

அந்த நாட்டு நடிகர்கள் நம்மவரைப் போலவே, பொது நலப் பணி புரிந்து வருகிறார்கள். அவர்களில் முன்பே உலகத்திற்கு இம்முறையில் அறிமுகமானவர் டேனிகே எனும் நகைச்சுவை நடிகர். ஹாலிவுட் நடிகரான அவர், இலட்சக் கணக்கான வருமானத்தைப் பெரிதென மதிக்காது, மக்களின் பணியே பெரும் இலட்சியம் — என நினைத்துப் பணியாற்றி வருகிறார். அரசியல் பெருங்களமான ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் குழந்தைகள் உதவி நிதியின் தூதுவராக உலகம் முழுதும் சுற்றிப் பொதுப் பணியாற்றுகிறார்.

இவரை அடுத்து இன்னொரு பெரும் ஹாலிவுட் நடிகர் பொதுப் பணி புரிய முன்வந்திருக்கிறார்! ஜெனிவாவிலுள்ள ஐ. நா. அகதிகள் ஹைகமிஷனில் அவர் பணியாற்றுகிறார்.

அடுத்த மூன்று ஆண்டுகள் அல்லற்படும் அகதிகளுக்குத் தமது நேரத்தில் பெரும்பகுதியைச் செலவிடுவார். சர்வதேசப் பிரச்சினையாகிய அகதிகள் பிரச்சினையில் அதிக ஆர்வம் காட்டுவார். அதற்கான ஐ. நா. கமிஷனின் சிறப்பு ஆலோசகராக இருப்பாராம்! ஊதியமில்லாத இந்தப் பொதுப்பணிக்காக அவர் அதிக தூரம் அடிக்கடி பயணம் நடத்த வேண்டியிருக்குமாம்!

அகதிகளின் அவல வாழ்க்கை பற்றியும், அவர்கள் வாழ்வு வளம் பெறவேண்டிய அவசியம் பற்றியும் இவரே ஒரு படம் எடுக்கப் போகிறாராம்.

இத்தகைய விரிந்த உள்ளமும் அரசியல்வாதிகள் திணறும் இத்தகைய பிரச்சினைகளில் ஆர்வமும் கொண்ட இவர் வேறு யாருமில்லை!

அமெரிக்கப் படங்களில் மொட்டைத்தலையுடன் தோன்றி நடித்து, புதுமையை உண்டாக்கிய யூரல் பிரைன்னர் தான்!

பிரபுராம் பிக்சர்ஸ் தொடக்க விழாவில் கலந்துகொண்ட ஜெமினி அதிபர் எஸ். எஸ். வாசன், கொத்தமங்கலம் சுப்பு, முத்துமாணிக்கம், சிவாஜி கணேசன் ஆகியோரைக் காணலாம்.

குவாட்ராவிஷன்

மேனாட்டினர் கண்டுபிடித்துக் கொண்டே போகிற அறிவியல் சாதனங்களில் 'குவாட்ராவிஷன்' —என்பதும் ஒன்று. இதற்கு நான்கு திரைகள் தேவைப்படுகின்றனவாம். ஒரே சமயத்தில் அவசியம் ஏற்பட்டால், நான்கு திரைகளிலும் திரைப்படம் ஓடுமாம். இப்படித் திரைகளின் எண்ணிக்கை அதிகமாக ஆக பார்க்கும் மக்களின் கவனம் வேறு பக்கம் திரும்புவதில்லையாம். அதோடு நேரே பார்ப்பது போன்ற உணர்ச்சியும் ஏற்படுகிறதாம்!

சமூகக்கதை!

காமாட்சி பிக்சர்ஸ் — எனும் படத்தயாரிப்பு நிலையத்தார் தம் முதல் தயாரிப்பாக சமூகப்படம் ஒன்றில் கவனம் செலுத்தி வருகின்றனர். இதற்கு சரித்திரக் கதைகள் பல எழுதியுள்ள சாண்டில்யன் கதை, வசனம் எழுதுவார். வி. ராமநாதன் இப்படத்தை டைரக்ட் செய்வார்.

ஏ. வி. எம்-மின் உலகப் பயணம்!

உலகப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு தாயகம் திரும்பியிருக்கிறார் ஏ. வி. எம் நிறுவன அதிபர் ஏவி. மெய்யப்பன் அவர்கள். ஆசிய, அமெரிக்க நாடுகளில் அவர் பற்பல படத்தயாரிப்பு நிலையங்களுக்கு சென்று, அங்கு அவர்கள் கையாளும் உயர்ந்த கலை நுணுக்கங்களைப் பார்வையிட்டு வந்துள்ளார். அவருக்கு விமான நிலையத்திலும், ஸ்டுடியோவிலும் வரவேற்புத் தந்தனர், திரையுலகப் பிரமுகர்கள். ஏ. வி. எம்-மின் உலகப்பயணம் தமிழ்ப் படவுலகத்திற்குப் பெரிதும் பயன்படவேண்டுமென விரும்புகிறோம்.

தடை இல்லை!

எடுத்ததற்கெல்லாம் தடை போடும் நம் அரசினரின் கவனத்தைக் கவரும் வகையில், நியூயார்க் மாநிலத்தில் திரையிடப் படக்கூடாதென்று தடை விதிக்கப்பட்டிருந்த 'லேடி சாட்டர்லிஸ் லவ்வர்' — எனும் படத்தை மறுபடியும் திரையில் காட்டலாம் —என சுப்ரீம் கோர்ட் உத்திரவிட்டுள்ளது.

அப்பட்டமான முறையில் கெட்ட நடவடிக்கைகளைக் காட்டாதவரையில் ஒரு படத்தைத் தடை செய்ய முடியாது. என அதற்கு விளக்கம் கூறப்பட்டுள்ளது.

பாட்டாளியின் வெற்றி

வெற்றி பெறுகின்ற இனம் மன்னரும் அவர்தம் வழி வந்தோரும்தான்—என்ற எண்ணத்தைச் சிதைத்து, பாடுபடுபவன் வெற்றி வாகைக்குரியவன் — என்ற கருத்தின் அடிச்சுவட்டில் செல்லும் இக்கதையை சம்பு பிலிம்சார் தயாரித்து வருகின்றனர். ஏ. நாகேஸ்வரராவ், டி. எஸ். பாலையா, சாவித்திரி, எஸ். வி. ரங்கராவ் முதலியோர் நடிக்கின்றனர், இப்படத்தில்! ரா. வெங்கடாசலம் கதை வசனம அமைக்கும் இப்படத்தை ஏ. சுப்பராவ் டைரக்ட் செய்வார்.

நடிப்பிசைப் புலவர் நடிக்கும் படம்!

ஓம்சக்தி பிலிம்சார் — 'வைராக்கியம்' எனும் படத்தைத் தயாரித்து வருகிறார்கள். இத்திரையோவியத்திற்கு மெருகூட்டும் வகையில் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்கள் முக்கிய பாகமேந்தி நடிக்கிறார். அவருடன் எஸ். வி. சுப்பையா, தங்கவேலு, பி. எஸ். சரோஜா, முத்துலட்சுமி, வனஜா ஆகியோர் நடிக்கின்றனர். விசுவநாதன்-ராமமூர்த்தி இசையமைக்கும் இப்படத்தை கே. ஆர். சுந்தரேசன் டைரக்ட் செய்கிறார்.

மோகன் பிலிம்ஸ்

மோகன் பிலிம்ஸ் — எனும் படக் கம்பனியார் தம் இரண்டாவது தயாரிப்பில் ஈடுபட்டிருக்கின்றனர். அதற்கான ஆரம்ப விழா அருணாசலம் ஸ்டுடியோவில் நடைபெற்றது. இந்தத் திரைப்படத்தில் வடநாட்டைச் சார்ந்த குழந்தை நட்சத்திரம் டெய்சி இராணி நடிக்கும். கே. வி. மகாதேவன் இசையமைக்கும் இப்படத்தை ஏ. கே. வேலன் டைரக்ட் செய்வார்.

'திருமதி' தமிழ்ச்சொல்லே!

★

தமிழகமே இன்று மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்து கிடக்கிறது. காரணம் சென்னை நகராட்சியில் 'ஸ்ரீ', 'ஸ்ரீமதி'யை ஒழித்து விட்டார்கள்! 'திரு', 'திருமதி' எனும் தமிழ்ச் சொற்கள் வழக்கிற்கு சட்டப்படி வந்து விட்டன. தந்தை பெரியார் கூட தலையங்கம் எழுதி வரவேற்றார்! ஆனால், 'ஒரு பத்திரிகை' திருமதி தமிழா? —என்ற பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறது.

ஸ்ரீமதியிலுள்ள 'மதி'யைத்தான் திருவுடன் இணைத்திருக்கிறார்கள். கலப்படம் செய்துவிட்டார்கள் —என்று நமக்குத் தமிழ் போதிக்க வருகிறார்கள்!

ஸ்ரீமான் என்பதில் வரும் 'மான்' என்ற சொல்லை வைத்து, 'சேரமான்', 'கருமான்' என்ற தமிழ்ச் சொற்கள் பிறந்தன — என்பது எவ்வளவு அறிவுடமை ஆகாதோ அதுபோலத்தான் ஸ்ரீமதியிலுள்ள 'மதி' தான் திருமதியில் ஒட்டிக் கொண்டது எனும் பேச்சும்!

மதி என்றால் தமிழில் நிலவு என்று பொருள். பெண்ணை நிலவுக்குஒப்பிடுவது மரபு. மதி என்றால் அறிவு என்று கூடப் பொருளுண்டு! முழுமதி—என்பது தமிழ்க்கவிஞர்களின் சொல்! வளர்மதியும் அப்படியே! 'மார்கழித்திங்கள் மதி நிறைந்த நன்னாளில்!'—என்பது பெண்பாற் புலவரின் பாட்டு!

ஆகவே செந்தமிழ் தந்த சொல்தான் மதி.

திரு என்றால் செல்வம், அழகு, அறிவு, மேன்மை என்ற பொருள்களைத் தரும், இத்தகைய சொல்லுடன் மதி என்ற சொல்லைச் சேர்த்தால் கேடு ஒன்றுமில்லை; மதிப்புத்தான் அதிகமாகிறது! பெண்ணுக்குப் பெருமை தருவதில் தவறில்லையே?

'திருவாட்டி' — என்பதையும் பயன்படுத்தலாம். ஆனால் 'திருமதி'— என்பதில் மென்மையிருக்கிறது! பெண்மைக்கு உரியதன்றோ மென்மை?

மதி என்ற சொல்லை வினைச்சொல்லாக எடுத்துக் கொண்டாலும், திருமதி என்பதற்கு, செல்வம் என மதிக்கத்தகும், அழகு என மதிக்கத்தகும், அறிவு என மதிக்கத்தகும், மேன்மை என மதிக்கத்தகும்-என்பது போன்ற விரிந்த பொருள் உண்டாகும்.

ஆகவே, திருமதி நல்ல தமிழ்ச்சொல்! பெண்களைக் குறிப்பதற்கென்றே பிறந்த சொல்!

பொங்கு தமிழர் கூட்டம் பூவிருந்தவல்லியில்!

பூவிருந்தவல்லி—! பைந்தமிழ் எழுத்துக்கள் பதம் சேர்த்து ஆடும் அழகுச் சொல்! சொல்லோடு மட்டுமல்ல செயல் வீரர்கள் நிறைந்த ஊர்!-எனவேதான் அரசியற் பகைவர்கள், 'பூவிருந்தவல்லியில் மாநாடு கூட்டிவிடுவீரோ? புதுவைத் தேர்தலில் பட்ட அடி போதாதோ? கருமாதி செய்யவே இம்மாவட்ட மாநாடு கூட்டுகிறீர்கள்!'—என்று எக்காளம் ஊதி, நாட்டிலே பீதியைப் பரப்பிவிட்டனர்!

மேகம் மறைக்குமே என்று உதயசூரியன் ஒளிந்து கொள்வதில்லை! மிரட்டல் மொழிகளுக்குப் பயந்து மாநாடு நின்றுவிடவில்லை. குறித்த நாளில் இரு வண்ணம் பொறித்த கொடிகள் பட்டொளி வீசிப் பறந்திட, பார்ப்போர் மனம் பரவசக் கடலில் மூழ்கிட, பகைவர் மனம் நடுங்கி ஒடுங்கிட செங்கற்பட்டு மாவட்ட மாநாடு பூவிருந்தவல்லியில் கடந்த செப்டம்பர் திங்கள் 12, 13—தேதிகளில் நடைபெற்றது.

புறநானூற்றுத் தாய்மார்களின் வீரத்தை நினைவுபடுத்தினார், மாநாட்டுத் தலைமையேற்று சிறந்த சொற்பொழிவாற்றிய டாக்டர் சேதுபாஸ்கரன் அம்மையார் அவர்கள். மாநாட்டைத் திறந்துவைத்துப் பேசிய தோழியர் ராஜேஸ்வரி சண்முகம் அம்மையார் அவர்களும் அந்தப் பெருமையில் பங்கு கொண்டார்.

தாய்க் குலத்தோர் தாயகத்து விடுதலை கீதத்தை மறந்தவர்கள் அல்ல; உற்றாரைக் களத்திற்கு அனுப்புவதோடு மட்டுமல்ல; அவசியம் நேர்ந்தால் தலைமையேற்கவும், தண்டனையடையவும், தடியடி படவும், திராவிடம் பிரிய வேண்டுவதற்கான காரணங்களை அடுக்கடுக்காகக் கூறி விளக்கம் தரவும் தயார் — என்பதைத்தான் தோழியர்களின் மாநாட்டுப் பங்கு நமக்கு எடுத்தியம்பிற்று.

சிறப்பான ஊர்வலமும், சிந்தை அணுமகிழ வைக்கும் இரு வண்ணக் கொடியேற்றமும் காலையில் நடைபெற்றன.

கழக முன்னணி வீரர்கள் தனித்தனித் தலைப்புக்களில் அரசியல், மொழித்துறையின் எல்லையைக் காட்டினார்கள், தம் எழுச்சிமிகு பேச்சால்!

அடுத்த நாள் கொள்கை விளக்கப் பேச்சுக்களின் முத்தாய்ப்பாக விளங்கின, நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் பேச்சும், அறிஞர் அண்ணா அவர்களின் அறிவுரையும்!

'காசநோயென நாட்டை அரித்து, அழித்துவரும் இந்தியை எதிர்த்துப் போர் முரசம் தட்டும்போது, களம் புகுந்து கண் நிகர் மொழிக்காக்க இப்போதே பட்டியல் தயார் செய்து கொள்ளுங்கள்" என எழுச்சிக் குரல் கொடுக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இன்னும் பற்பல துறைகள் பற்றிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கருமாதி மாநாடு என்று கேலி புரிந்தவர்கள் முகத்திலே கரி பூசப்பட்டது; 'குறுகிய புத்திக் காரர்க'ளின் மாநாட்டில் குழப்பம் ஏற்படும் என்று ஏங்கித் திரிந்தோர் ஏமாற்றம் அடையும் வகையில் சிறுடனும் சிறப்புடனும் நடைபெற்றது. கழகத் தோழர்கள், எதிர்ப்புகள் ஆங்காங்கு கிளம்பியபோது காட்டிய பொறுமையும் பெருந்தன்மையும் மாநாட்டிற்குப் புகழ் சேர்த்தன. இத்தகு விதத்தில் மாநாட்டை சிறப்புற நடத்தித் தந்த பெருமைக்குரியவர்களானார்கள், தி. ந. சம்பந்தம் அவர்களை வரவேற்புக் குழுத் தலைவராகவும், சி. வி. எம். அண்ணாமலை, டி. ராசரத்தினம், டி. கே. பேரூரான், ஜே. ஏ. வகாப் ஆகியோரை செயலாளராகவும், அறிஞர் அண்ணா அவர்களைப் பொருளாளராகவும் கொண்ட வரவேற்புக் குழுவினர்! ∴



மாநாட்டில், தலைவர் டாக்டர் சேதுபாஸ்கரன் அம்மையார், திறப்பாளர் இராஜேஸ்வரி சண்முகம், பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் ஆகியோர்.

ரோமாபுரிப்...

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

இறுதியில் அவனைக் கீழே தள்ளிவிட்டுத் தொலைவில் சென்று. அங்கு கிடந்த ஒரு கருங்கல்லைத் தூக்கி அவன் தலையில் போட ஓடிவந்தாள். கீழே கிடந்த கிழவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவள், அவன் தலைக்குக் குறிபார்த்துக் கல்லைப் பலங்கொண்ட மட்டும் இரு கைகளாலும் உயரத்தூக்கி அவன் மீது எறிந்தாள். அதைப் பற்றிக் கவலையே கொள்ளாமல் படுத்திருந்த கிழவன், தலைக்கு நேரே வந்த கல்லை இடது கையால் தட்டி விட்டு வேகமாக எழுந்து அவளைத் துரத்தினான். அவள் ஓட முயன்றாள். கிழவன் விடவில்லை. அவள் கையைப் பிடித்துக்கொண்டான். முத்து நகை அவனைத் தாக்குவதற்குக் கையை ஓங்கினாள். உடனே, கிழவன் கலகலவென்று நகைத்து, தன் தாடியையும் தலை முடியையும் எடுத்து முத்துநகையின் கையில் கொடுத்தான்,

முத்துநகை, "அத்தான்!" என்று ஆசையுடன் அழைத்து அவனைத் தழுவிக்கொண்டாள். கூன் விழுந்த கிழவன் நிமிர்ந்து நிற்கும் சிங்கமாய்—வீரபாண்டியாய்க் காட்சி அளித்தான்.

"ஏமாந்து விட்டாயா?" என்றான் இருங்கோவேள், இருபொருளை மனதில் எண்ணிக் கொண்டு!

ஏதுமறியாத அந்தப் பாவை இருங்கோவேளின் மார்பகத்தில் முகம் பதித்து இன்பங் கண்டாள்.

"எதிரிகளிடம் காட்ட வேண்டிய திறமையை என்னிடமே காட்டுகிறீர்களா அத்தான்?"

"நீ கூட எதிரிதானே?"

"என்ன?"

"ஆமாம் — காதல் எனும் போர்க்களத்தில் நாம் இருவரும் ஒருவருக்கொருவர் எதிரிகள்தான்! அப்போதுதானே இந்தப் போர்க்களம் சுவைக்கும், கண்ணே?"

"அதிருக்கட்டும் — இந்த வேடம் எதற்காக?"

"இதுதான் கரிகால் சோழரை சந்திப்பதற்குப் போட்டுக் கொண்டுள்ள வேடம்!"

"ஏன்......உண்மையான வீரபாண்டியாகவே வருவதில் என்ன குற்றம்?"

"என் உண்மை உருவில் வந்தால், என்னையும் உன்னையும் பற்றி அரசர் சந்தேகிக்க இயலும். நமமிடையே எப்படி தொடர்பு ஏற்பட்டது என்று எண்ணிடத் தோன்றும். அந்தச் சாதாரணச் சந்தேகங்கள்கூட யாருக்கும் ஏற்படலாகாது என்பதற்காகவே இந்த வேடம் பூண்டேன். அதிருக்கட்டும் — அரசரைப் பார்க்க அனுமதி கிடைத்து விட்டதா?"

"நான் போய்த் தோல்வியோடு திரும்புவேனா?"

"ஆகா! உன் திறமையே திறமை! அப்படியானால் எப்போது சந்திப்பது?"

"இன்றைக்கே சந்திக்கலாம்—எப்போது வேண்டுமானாலும் அரசர் தயார்!"

"கண்மணி!...உன் திறமைக்குப் பரிசாக......" எனக்கூறியபடி இதழ் குவித்தான் இருங்கோவேள்!

[தொடரும்]

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட்ரோடு, சென்னை—6. தமிழ்நாடு.